

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

பங்குனி - சித்திரை
ஏப்ரல் - 2019

மலர் 8 இதழ் 4

பொருளடக்கம்

| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| Vedantic Prayer | 9 |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 13 |
| இராமாவதாரம் எதற்காக | 15 |
| ஸத் விஷய ஸங்கரஹம் | 17 |
| தமிழ் பாகவதம் | 18 |
| குரு கடாக்ஷம் | 20 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 11 | 22 |
| முதலாவது வார்ஷிக ஆராதனை | 24 |
| ருத்ரகீதை | 26 |
| ஸ்ரீ மஹா பெரியவரின் அத்வைதம் | 28 |
| வால்மீகி பிரதீபம் - 50 | 30 |
| புராணக்கதை | 32 |
| வேதாந்த ஸாரம் | 34 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 37 |
| ஸபா ரஞ்ஜன சதகம் | 38 |
| த்ரிபுரஸுந்தரி பாதத்ஸ்தவம் | 40 |
| பித்ரார்ஜிதம் | 41 |
| மகாபாரத சுருக்கம் | 43 |
| யமபயம் இல்லாதவர் யார்? | 45 |
| மஹா பெரியவாவின் வைரமொழிகள் | 47 |

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்







## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चिरकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

அஸதோ மா ஸத் கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

இறைவனே அசத்திலிருந்து சத்துக்கும் இருளிலிருந்து ஒளிக்கும் மரணத்திலிருந்து சாகா நிலைக்கும் எங்களை அழைத்துச்செல்.

வாசகர்கள் அனைவருக்கும் விகாரி தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள். மேலே உள்ள உபநிஷத் மந்த்ரம் நமக்கு வழிகாட்டட்டும். இந்த மந்த்ரம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். அஸத் தமஸ் ம்ருத்யு என்று மூன்றினை விலக்கச் சொல்கிறது. எல்லாராலும் முடியாது என்பதனால் இறைவனையே அழைத்துச் செல்ல வேண்டுகிறது. சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

அசத் என்றால் என்ன? இல்லாதது என்று பொருள். ஸ்ரீ சங்கரர் மாறிக் கொண்டேயிருப்பதை அசத் என்பர். மாறாமலிருப்பதை ஸத் என்பர். ''யத் வ்யபிசரதி தத் அஸத் யத் ந வ்யபிசரதி தத் ஸத்''). இன்று நாம் பார்க்கும் உலகம் மாறிகொண்டே தான் இருக்கிறது. நிலையே இல்லை. அறிவியல் கருத்துகளும் கோட்பாடுகளும் மாறி கொண்டேயிருக்கின்றன. மாறிக்கொண்டேயிருப்பது தான் மாறாததன்மை என்கின்றனர். மாறி கொண்டிருக்கிறது என்பதை மாறாமல் ஒரு பொருள் இருந்தால்தான் தெரிந்துகொள்ளமுடியும்.

இதை யாரும் புரிந்துகொள்ளவில்லை. விளைவு அனர்தம். இன்றைய விஞ்யான உலகில் எதுவும் எளிதாக்கப்பட்டுள்ளது அதன் உண்மை எல்லையை உணர மக்கள் மறுக்கிறார்கள். இந்த அஸத்திலேயே உழல்கிறார்கள். அடுத்து தமஸ் நாம் எல்லாரும் நமது உண்மை ஸ்வரூபத்தை அறியவில்லை. அது ஒளி பொருந்தியது முக்காலத்திலும் இருப்பது. அந்த ஸத்தை சைதன்யத்தை

உணராமல் வாழ்க்கையை நடத்துகிறோம். அப்படியிருப்பவர்கள் மூடர்கள் என்று உபனிஷத்கள் கூறுகின்றன. கயிற்றில் தோன்றும் பாம்பையே ஸத்யமாகக் கொண்டு இருட்டில் ஆத்மாவைக்கொல்பவர்களாய் நடந்து கொள்கிறோம். ஞானியின் ப்ரபோதத்தை அடைவதில்லை நாம். மாயை தமஸ். அதாவது இருட்டு. ஞ்யானி ப்ரம்ம வெளிச்சத்தில் இருக்கிறான். ஜோதிமயமாக உள்ள அந்த நிலையை நாம் அடைய முயலாமல் தம்ஸ்ஸிலேயே இருக்கிறோம். அடுத்து ம்ருத்யு அதாவது மரணம். ''புனரபி ஜனனம் புனரபி மரணம்'' என்று அவித்தையில் ஊறி இருக்கும் நாம் பரமாத்மாவை உணராமல் மீண்டும் மீண்டும் பிறக்கிறோம். 'ஸஸ்யமிவ மர்த்ய; பச்யதே ஸஸ்யமிவ ஆஜாயதே புன:'' என்று காடகம் கூறும். ஆத்மாவை அறியாமால் புல் பூண்டுகள் போல் மனிதனிறக்கிறான். பிறக்கிறான் என்று பொருள். அம்ருத நிலையை அடைய முயல்வதில்லை.

நம்மால் அஸத் தமஸ் ம்ருத்யு இம்மூன்றையும் விலக்கமுடியாது என்று ரிஷிகள் அறிவர். அதனால்தான் இம்மூன்றிலிருந்தும் அழைத்துச்செல் என்று ப்ரார்த்திக்கிறார்கள். இந்த விகாரி புதுவருடத்தில் அறியாமையை அகற்றி ஸத்தாகவும் ஜோதியாகவும் அம்ருதனாகவும் இருக்கும் பரம்பொருளை நாட முயலுவோம். எல்லாரும் நிரம்ப இருந்து எந்த வேறுபாடு இல்லாமல் அம்ருத நிலையை அடைய ஸங்கல்பம் எடுப்போம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. பரிபூரண வாழ்வு மலர்க என்று கூறிக் கொண்டு இவ்விதழை ஸ்ரீ சரணகளின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## விகாரி வருட நல்வாழ்த்துக்கள்

# கீதை பிறந்தது எதற்காக?

## பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



பகவத் கீதையின் உபதேசங்களெல்லாம் அநேகமாக உபநிஷத் வாக்கியங்களை அனுசரித்தே இருக்கின்றன. சிலவிடங்களில் உபநிஷத் வாக்கியங்கள் அப்படியே கீதையில் காணப்படுகின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில் நாரதர் கந்தபிரானுடைய அவதாரமாகிய ஸநத்குமாரரிடம் தங்களைப் போன்ற பெரியோர்கள் ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்தவன் சோகத்தைத் தாண்டுகிறான் என்பதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். யானோ சோகத்தினால் வருந்துகிறேன். ஆகையால் தாங்கள் என்னைச் சோகத்தைத் தாண்டுவித்து அருள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறார்.

இவ்வண்ணம் பூர்ண ச்ரத்தையுடன் வேண்டிக் கொள்ளும் நாரதருடைய சித்தத்திலிருந்த தோஷங்களெல்லாம் இந்த ச்ரத்தையினாலேயே உதிர்ந்துவிட்டன. ஸநத்குமாரரும் அவரை அநேகவிதமாக ப்ரச்னம் செய்து அவரது மனதை அலசி சுத்தப்படுத்தி இறுதியில் அவருக்கு இருளைத் தாண்டி நிற்கும் நிலையை காட்டினார். இது சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்ட கதை. இச்சிறிய வேத கதையையே ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அர்ஜுனன் முன்னிலையில் வைத்துப் பதினெட்டு அத்யாயங்களாக விரித்திருக்கிறார். வேதத்தில் ஸத்யத்தைச் சொல் என்னும் ஒரு சிறு வாக்கியம் வ்யாஸரால் பெரிய ஹரிச்சந்திர புராணமாக விவரிக்கப்பட்டிருக்கவில்லையா?

நாரதர் "ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவன் சோகத்தைத் தாண்டுகிறான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்கிறார். ஸநத்குமாரர் அந்நாரதருக்கு இருளின் எல்லையைத் தாண்டிய நிலையைக் காட்டுகிறார்.

இருளின் எல்லையற்ற தாண்டின நிலையே பிரகாசம்,
சோகத்தைத் தாண்டிய நிலையே ஆனந்தம்,
பிரகாசமே ஆனந்தம்,
இருள் ஏமாற்றம்,
பிரகாசமே உண்மை,
சோகங் கடந்த நிலையே உண்மை,
இதுவே உபநிஷத்ஸாரம்; இதுவே கீதாஸாரம்

सविपनिषदो गाव: दोग्धा गोपालनन्दन: ।
पोर्थो वस्स: सुधो भोक्ता दुग्धं गोतामृतं महत् ।।

## அத்யாயம் 2

आपूर्यमाणमचलप्रतिष्टं
समुद्रमाप: प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे
स शान्तिमापोति न कामकामी ।। (२.७०)

கீதையின் இரண்டாவது அத்தியாயம், அழகும், கம்பீரமும் ஒருங்கே அமைந்து படிக்கும் க்ஷணத்திலாவது எவனையும் சாந்தப்படுத்துகிறது. சாந்தப்படுத்துவதே இந்த இரண்டாவது அத்தியாயத்தின் முக்கிய நோக்கம். அதில் ரத்னமாக விளங்குவது இந்த ச்லோகம். முண்டகோபநிஷத்தில் 3, 2. வது மந்த்ரத்தின் கருத்தே இந்த ச்லோகத்தில் கம்பீரமாக விளங்குகிறது.

நமக்கு ஒரு சுகம் வேண்டும். அதற்காக ஒரு பக்ஷணக் கடைக்குப் போகிறோம். நமக்கு மற்றும் சுகம் வேண்டும். சங்கீதக் கச்சேரிக்குப் போகிறோம். மற்றொரு சுகம் வேண்டும். சினிமா கொட்டகைக்குப் போகிறோம். இன்னும் சுகம் வேண்டும். ஸ்திரீயைத் தேடுகிறோம். பெரிய பதவியை நாடுகிறோம். கீர்த்தியை அபேக்ஷிக்கிறோம். அதிகாரத்தைக் கைவசப்படுத்த எண்ணுகிறோம். பணத்தைக் குவிக்கத் திட்டமிடுகிறோம். பக்ஷணமோ, பாட்டோ, கூத்தோ, பெண்டிரோ, பணமோ, பதவியோ, அதிகாரமோ வெளியிலிருந்து வந்தால் தான் நாம் சுகத்தினால் நிறைந்தவராகிறோமென நினைக்கிறோம். இவைகளைத் தேடிக் கிடைக்கும் வரையில் நாம் சாந்தனாகவிருக்க முடிகிறதில்லை. அசாந்தனாகவேயிருக்கிறோம். ஒன்றைத் தேடிப் பிடித்த பின்னும் நாம் சாந்தனாவதில்லை. தேடிப் பிடித்த பின்னும் நாம் சாந்தனாவதில்லை. தேடிப்பிடிக்க வேண்டிய பொருள்கள் கணக்கினளவிற்கு உட்படாமலிருக்கின்றன. ஆகையால் எப்பொழுதும் அசாந்தியே. இவ்வாசைப் பொருள்கள் கிடைக்காத நாம் எளியவர்கள். அவை கிடைக்காத நாம் குறைந்தவர்கள். ஆகையால் என்றும் குறைந்தவர்களாகவே இருக்கிறோம். என்றும் தரித்திரர்களாக இருக்கிறோம்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### கடவுளை நம்பினார் கைவிடப்படார்

கர்ப்பவதியான பின்பும்கூட, நாரதர் முதலிய பெரியவர்களிடமிருந்தெல்லாம் நிறைய நல்ல தெய்வக் கதைகளையெல்லாம் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்டு, வயிற்றிலிருக்கும் குழந்தைக்கும் கூட, அந்த எண்ணங்கள் ஏறும்படியாகக் கேட்டுக் கொண்டாள்.

அந்தக் காலத்திலெல்லாம் கர்ப்பம் ஆரம்பித்து விட்டாலே அந்த நேரம் முதல் பிரசவம் ஆகும் காலம் வரை, தீய சப்தமோ, கெடுதலான வார்த்தையோ சுடு சொற்களோ காதில் விழாதபடி பார்த்துக் கொள்வார்கள். கெடுதலான ஆகாரம் உட்கொள்ளாமல் பார்த்துக் கொள்வார்கள். நல்ல வழியிலேயே நடப்பதற்கு வழிகாட்டி இந்தப் பெண்மணியைப் பார்த்துக் கொள்வார்கள். ஆகையினால் பிறக்கும் குழந்தை நல்லதாகப் பிறக்கும். அதுதான் பழங்காலத்தின் வளர்ப்பு முறை. அதனால்தான் நாடும், குழந்தைகளும் நன்றாக இருந்தார்கள். அந்த வகையிலே பிரஹ்லாதன் வயிற்றுக்குள்ளே கர்ப்பமாக இருந்தது முதல் பிறக்கும் வரை நல்ல பக்தியோடு, சிரத்தையோடு, விஸ்வாசத்தோடு கடவுளையே நினைத்துக் கொண்டிருந்தான். கயாது பிரஹ்லாதனைப் பெற்றெடுத்தாள். பெற்றெடுத்தது முதல் அந்தக் குழந்தைக்குப் பால் புகட்டுவதுடன் விஷ்ணு பக்தியையும் புகட்டி வந்தாள். நம்பிக்கையையும் புகட்டி வந்தாள். விஸ்வாசத்தையும் புகட்டி வந்தாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் குழந்தை நன்றாக வளர்ந்து வந்தது. மூன்று வயதாயிற்று. குழந்தை பேசத் தொடங்கியது. என்ன பேசுகிறது "நாராயணாய நம: நாராயணாய நம:" என்று சொல்கிறது. எப்போது பார்த்தாலும் அப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறது. ஏனெனில் கர்ப்பத்திலேயே இந்த எண்ணங்க ளெல்லாம் சம்ஸ்காரங் களெல்லாம் ஏறியிருக்கிறதனாலே எப்பொழுதும் அந்த மந்திரத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறது.

தகப்பனார் ஹிரண்யகசிபு வந்தார். குழந்தையைப் பார்த்தார். விளையாடினார். உச்சி மோந்து பார்த்தார். அது அப்பா என்று கூப்பிடுமோ என்று கிட்டத்தில்போய் இரண்டு மூன்று தடவை வாயைப் பார்த்தார். ஆனால் குழந்தையோ "நாராயணா நாராயணா, நாராயணா?" என்று சொல்லிற்று. அது யாரடா நாராயணா? என்று கேட்டார். திரும்பத் திரும்ப நாராயணாய நம: நாராயணாய நம: என்று தான் சொல்கிறதாற் போலிருக்கிறது என்று அவருக்குத் தோன்றியது.

உடனே அதற்கு ஆசிரியரைப் போட்டு இனிமேல் "ஹிரண்யாய நம" என்று தான் சொல்ல வேண்டும். "நாராயணாய நம:" என்று சொல்லக் கூடாது என்று மூன்று வயதிலிருந்தே சொல்லிக் கொடுக்கும்படி செய்தார். அப்படிச் சொல்லியும்கூட அந்தக் குழந்தை ஒரு நிமிஷம்கூடத் தகப்பனாரைப் பற்றி நினைக்காமல் வழி தவறானது என்பதனால் பகவானையே நினைத்தது.

எட்டு வயசு பத்து வயதாயிற்று. அப்பொழுது அதற்கு வேண்டிய சடங்குகளையெல்லாம் செய்ய வேண்டி வந்தது. எல்லாச் சடங்கும் செய்தார்கள். என்ன சடங்கு செய்தாலும் எல்லாவற்றையும் "ஹிரண்யாய நம:" சொல்லித்தான் செய்ய வேண்டும் என்றார்கள். ஆனால் விஷ்ணுவின் நாமாவையே குழந்தை சொன்னான்.

ஒருநாள் கோபம் வந்துவிட்டது. ஹிரண்யகசிபு கேட்டான். எப்பொழுதும் நாராயணா என்கிறாயே அந்தக் கடவுள் இங்கே இருக்கிறானா? என்று கேட்டான். எங்கே இருக்கிறான் அவன்? என்று கேட்டான்.

குழந்தையாய் இருந்தவன் மாணவப் பருவத்தை அடைந்து விட்டான் பிரஹ்லாதன் என்ற மாணவன் சொன்னான். இதுவரைக்கும் யாருமே அவனிடம் திருப்பிப் பேசியதே கிடையாது. பதில் சொன்னதே கிடையாது. இப்போது தைரியமாய் எதிர்த்துப் பேசுவது பிள்ளை ஒன்றுதான்.

"அவர் எங்கே இல்லை?" என்று தைரியமாய்க் கேட்டாள். "என்னடா இது இவன் இப்படிக் கேட்டுவிட்டான்" என்று நினைத்தான்.

"என்னைத் தவிர வேறு ஸ்வாமியே கிடையாது. எல்லாம் ஹிரண்யன்தான். ஹிரண்மயம் ஜெகத்" என்றான்.

"கிடையாது. நாராயண மயம் ஜெகத். நாராயணன்தான் உலகம் முழுவதும்."

அப்பாவுக்கும், பிள்ளைக்கும் வாதம் விவாதம் கடைசியாக அப்பா கேட்கிறான். "நீ நாராயணா என்கிறாயே? அந்த நாராயணன் எங்கே இருக்கிறான்? இந்தத் தூணில் இருக்கிறானா?" என்று கத்தியை வைத்துக் கொண்டு அதிரும்படியாகக் கேட்கிறான்.

"ஆஹா... தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் எங்கள் நாராயணன் என்ற பாட்டைப் பாடுகிறான். உடனே அந்தத் தூணை வெட்டப் போகிறான். நாராயணா" என்று கத்துகிறான் பிரஹ்லாதன்.

அந்த நேரத்தில் நரசிம்ஹஸ்வரூபமாக பகவான் ஆவிர்ப்பவிக்கிறார். அப்படியே பயந்துபோய் விடுகிறான் ஹிரண்யகசிபு. கடவுள் இருக்கிறார். தூணிலிருந்து வந்துவிட்டார் என்பதை உணருகிறான் ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை.

(தொடரும்)

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

योऽस्योत्प्रेक्षक आदिमध्यनिधने योऽव्यक्तजीवेश्वरो
यः सृष्टेदमनुप्रविश्य ऋपिना चक्रे पुरः शास्ति ताः ।
यं सम्पद्य जहात्यजामनुशयी सुप्तः कुलाय यथा –
तं कैवल्यनुरस्तयोनिमभयं ध्यायेदजस्र हरिम् ।। ३० ।।


द who ग्रस्य of this universe उत्प्रेक्षक the planner ग्रादिमध्यनिधने in the beginning, middle, ad end यः who (वर्तते abides) ग्रव्यवत जीवेश्वरः the Lord of the *jivas* and the mahat यः who दंइ सृष्टवः projecting this Universe ऋपिणा as the indwelling Spirit ग्रनुप्रविश्य entering यः who पुरः (various) bodies चवू made ताः those यः who शास्ति rules over ग्रनुशयी *jivas* सुप्तः sleeping man कुलीयं यथा like the body यं सम्पद्य realizing which or attaining which ग्रजां maya or ignorance जइअति overcomes (lit.gives up) कैवल्यनिरस्तयोनिं who has transcended birth and death by the realization of Truth त that ग्रभयं (which is) Fear-lessness (itself) इरि the supreme Lord Hari ग्रजस्त्रं constanly ध्यायेत् should meditate upon.

30. *ya syotpreksaka adi-madhya-nidhane*
*yo vyakta-jivesvara*
*yah srstvedam anupravisya rsina cakre*
*purah sasti tah*
*yam sampadya jahatyajam anusayt*
*suptah kulayam vatha*
*tam karvaiya nirasta yonim abhayam*
*dhyayed -ajasram harim*

We should constantly meditate on Hari, the supreme Lord, who destroys all imperfections and impurities. Hari is the witness of the projection, protection, and dissolution of the universe. He is the Lord of all souls. After projecting the universe. Hari entered into every being as the *jiva*, as the immanent spirit and inspirer. On attaining Hari, the spiritual aspirant overcomes maya as easily as a sleeping man would forget his body. Hari is the Supreme Lord, the only one without a second. He is beginningless and is of the nature of fearlessness itself.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



*சங்கர ஜயந்தி நாளையில் இருந்து ஆரம்பமாகிறது. வைசாக சுக்லபக்ஷ பஞ்சமியில் சங்கரரின் அவதாரம் ஏற்பட்டது. பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ஐ தர்ம ஸம்ஸ்தாபனாய ஸம்பவாமி யுகே யுகே ॥ இது பகவானின் வாக்கு. சாதுக்களுக்கு தீமை ஏற்பட்டு அரக்கர்களை அழிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்ற போது அப்போது யுகம் தோறும் பகவான் அவதரிக்கிறார். தெய்வம் மனுஷ்ய ரூபேண என்று மனித வடிவில் அவதரிக்கிறார். மத்ஸ்ய அவதாரத்தில் வேதத்தினை காப்பாற்றினார். பத்து அவதாரத்தில் முதல் அவதாரம் வேதத்தினை காப்பாற்ற ஏற்பட்டது. தர்மத்தை கடைபிடிப்பதால் என்ன ஸுகம் என்ன லாபம். இது இரண்டும் இன்றி எவரும் செயல்படுவதில்லை. இதனால் ஏன் தர்மத்தினை கடை பிடிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனின் மனதிலும் ஸுகத்தின் ஆசையும் லாபத்தில் விருப்பமும் ஏற்படுகிறது. தர்மத்தினை கடைபிடிப்பதால் தான் இந்த இரண்டும் கிட்டுகிறது. நமது நாடு தவ நாடு, தியாக நாடு, தான நாடு, இதனால் வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் ஸாத்வீகமான சூழ்நிலை இருப்பதால் அமைதி கிட்டுகிறது என்று வருகிறார்கள். வேதத்தில் தர்மத்தின் உபதேசம் உள்ளது. இதன் விரிவுரை தான் புராணம். பதினெட்டு புராணங்கள் உள்ளன. இதிஹாஸங்கள் இராமாயணம், மஹாபாரதம். இராமயணத்தில் பெற்றோர்களுக்கு தொண்டு செய்த சிரவண குமாரின் வரலாறு சொல்லப்படுகிறது. இது வேதத்தில் மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ என்று சொல்லியுள்ளதற்காக விளக்கம். அரிச்சந்திரனின் கதை ஸத்யம் வத என்று சொல்லியுள்ளதை விவரிக்கிறது. கிருஷ்ண பகவான் சாந்தீபினி முனிவரிடம் குருகுல வாஸம் செய்து சேவை செய்து பாடம் படித்து ஆசார்ய தேவோ பவ என்பதின் விளக்கம். புராணங்களில் மிகவும் சொல்லப்பட்டுள்ளன. க்ஷேத்திரங்களுக்கும் புராணங்கள் உண்டு. வியாஸர் எழுதிய எல்லா புராணங்களின் நோக்கமும் புண்ணிய பாவங்களின் விவரத்தை தெளிவுப்படுத்துவதான். பரோபகார*

*புண்யாய பாபாய பரபீடணம் புண்ணியத்தை சம்பாதிக்க பரோபகாரம் செய்ய வேண்டும். அடுத்தவர்களுக்கு கஷ்டம் கொடுப்பது பாவம். இந்த கருத்தினை தான் பல கதைகள் மூலம் வற்புறுத்தி சொல்லப்பட்டுள்ளது. பக்தி செய்து ஸாத்வீக வாழ்வு வாழ்வதற்கு ஆகாரம் சுத்தமாக இருக்க வேண்டும். மற்றைய யுகங்களில் செய்யப்பட்ட காரியங்களின் ஸாரம் பகவத்கீதை. இதில் ஆகாரம் முதல் அத்வைதம் வரையில் கூறப்பட்டுள்ளது. பகவான் எங்கும் வியாபித்து உள்ளார் என்ற ஞானம் ஏற்பட வேண்டும். வேத புராண ஸாரம் பகவத் கீதை. வேதத்தினை காப்பாற்ற ஏற்பட்டது மத்ஸ்யாவதாரம். பூமியைக் காப்பாற்ற வராஹ அவதாரம். எங்கும் நிறைந்தவன் பகவான் என்று பக்தன் சொன்னதை நிலை நாட்டுவதற்காக ★நரஸிம்ம அவதாரம் ஏற்பட்டது. தானம் செய்வதில் கர்வமோ, அஹங்காரமோ இருக்க கூடாது. தானத்தை மனத்தூய்மையுடனும் நம்பிக்கையுடனும் ★என்ற எண்ணத்துடன் ஈஸ்வரனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதைக் காட்ட வந்தது வாமன அவதாரம்.*

*சூரிய குலத்தில் ரகு என்று ஒரு அரசன் இருந்தான். அவன் ஒரு யாகம் செய்து யாவருக்கும் தானம் அளித்த பின் ஒருவர் வந்தார். தான் குருவிடம் கற்ற கல்விக்காக குருதக்ஷிணை கொடுக்க வேண்டி ரகுவிடம் யாகிக்க வந்தார். இதில் மூன்று முறைகள் தெரிகிறது. 1. குருவிற்கு தொண்டு செய்ய வேண்டும் 2. குருவிற்கு மரியாதை காட்ட வேண்டும் 3. நாம் எந்த விஷயத்தை அறிவோமோ அதனை மற்றவர்கட்கு சொல்லித்தர வேண்டும். இப்போது ரகுவிடம் வந்தவரின் குரு தன் சீடனின் தூய்மையைக் கண்டு தக்ஷிணை ஏதும் கோற வில்லை. சீடன் மீண்டும் வற்புறுத்தி குரு என்ன கொடுக்க வேண்டும் என்று கேட்க, குரு தன்னிடம் சீடன் அறுபது கலைகளை கற்றுள்ள படியால் அறுபது கோடி கொடுக்க வேண்டும் எனச் சொன்னார். இதனைக் கேட்ட சீடன் இவ்வளவு பெரிய தொகையினை யாசகமாகப் பெற ரகு மஹராஜாவிடம் வந்தார். அப்போது ரகு யாவர்க்கும் தானம் செய்து விட்டிருந்ததால் அவரின் கஜானா காலியாக இருந்ததைக் கண்டு சீடன் இங்கு தான் கோறி வந்த உதவி கிடைக்காது என்று திரும்பி சென்றான். இதனைக் கண்ட அரசன் என்னிடம் வந்து ஏன் திரும்பினாய் என்று கேட்க்க, வந்தவன் தங்களிடம் எந்த காரியத்திற்காக வந்தானோ அது நடக்காது என்று தெரிந்து நான் வேறு எங்காவது தேடிக் கொள்ள திரும்பி செல்கிறேன் என்றார். ரகு என்னிடம் வந்தவர் வேறு எவரிடமும் போகக் கூடாது என்று சொல்லி, அவரை தங்க வைத்து, குபேரனுடன் யுத்தம் செய்ய தயாரானான், வந்தவர் ஒரு இரவு இங்கு தங்கினார். குபேரன் இரவோடு இரவாக ரகுவின் கஜானாவை பொருளால் நிரப்பி விட்டான். ரகு வந்தவரிடம் கஜானாவக் காட்டி இதில் உள்ளது யாவும் உங்களுக்கே எடுத்துக் கொள்ளுங்கள் என்ன, வந்தவர் எனக்கு எவ்வளவு தேவையோ அது மட்டும் போதும் என்று பெற்று சென்றார். தேவைக்கு மேல் ஆசை வைக்கக் கூடாது என்பதையும்,*

தானத்தை பக்தியுடனும் சிரத்தையுடனும் அளிக்க வேண்டும் என்பதையும் எவருக்கு எது தேவையோ அதனை காலம் அறிந்து சமயத்தில் தானம் செய்ய வேண்டும் என்பதை இந்த வரலாறு தெளிவுப்படுத்துகிறது. தர்மத்தின் ஒவ்வொரு உத்தேசத்தையும் கடைபிடித்துக் காட்ட ஏற்பட்டது ராமா அவதாரம். கலியுகம் பிறந்து ஐயாயிரம் ஆண்டுகள் முடிந்துள்ளது. இந்த யுகத்தில் சங்கர சங்கர ஸாக்ஷபத் என்ற படி ஆதிசங்கரர் காலடியில் அவதரித்து எட்டு வயதில் தார்மிக பிரசாரம் செய்ய முதல் உபதேசமாக பிராம்மண பெண்மையின் ஏழ்மையைப் போக்க '' கனகதாரா ஸ்தவம் '' செய்தார். ஆசை தார்மிகத்துடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும் எனச் சொன்னார். எங்கு பார்வதி தேவி, துருவன், பிரஹலாதன், பகீரதன், அர்ச்சுனன் போன்றவர்கள் தவம் செய்தனரோ அந்த பாரதத்தை மும்முறை யாத்திரை செய்து, ஸப்த முக்தி க்ஷேத்திரங்கள், புண்ணிய நதிகள்ஆகியவற்றினை தரிசித்தும், தீர்த்தமாடியும் வந்தார். இன்று நாம் கொண்டாடும் எல்லா பண்டிகைகட்கும் அடிப்படை காரணமாக இருந்து, நமது கலாசாரத்தினை காப்பாற்றி பல வகையான உபதேசங்களை செய்துள்ளார். பொது மக்களுக்காக பஜ கோவிந்தம், சிவானந்தலஹரி, ஸௌந்தர்யலஹரி போன்ற கிரந்தங்களையும் அருளியுள்ளார். மந்திர சாஸ்திரத்திற்காக பிரபஞ்ச ஸாரம் என்கின்ற கிரந்தத்தையும் அருளியுள்ளார்.

ஞான மார்க்கத்தினை நமக்கு காட்டினார். புண்ணிய பாபங்களை அறிந்து நல்லதைச் செய். எவர் பக்தியடன் இருக்கின்றாரோ அவருக்கே பகவானின் அருள் கிடைக்கும். இதற்காக பிரயத்னத்தையும் பிரார்த்தனையையும் செய்ய வேண்டும். தார்மிகச் செயலை பக்தியுடனும் சிரத்தையுடனும் செய்ய வேண்டும் என்று உபதேசம் செய்தார். அவர் காட்டிய வழியினை பின்பற்றி குறைந்த பக்ஷம் தினமும் இஷ்ட தெய்வத்தின் நாமங்களை காலை மாலைகளில் ஜபம் செய்து நல்ல புத்தி கிடைக்க வேண்டும் என பிரார்த்தனை செய்து நல்ல ஸ்வபாவம் ஏற்பட்டு, நல்ல ஸ்தோத்திரங்களைப் படித்து பாராயணம் செய்து, குளியலுக்குப் பின் நெற்றியில் அவரவர் குல வழக்கப்படி திலகம் இட்டு, ஈஸ்வரன் அருளால் மனதில் அமைதியினைப் பெற வேண்டும். காஞ்சியில் தேவியின் நாபிஸ்தானம் விழுந்ததால் அதற்கு காஞ்சிபுரம் எனப் பெயர் வந்தது. கௌஹாத்தியில் ஆஸ்பத்திரி (மருத்துவமனை) கட்டப்பட்டுள்ளது. அங்கு மக்களுகு தொண்டு நடந்து வருகிறது. தென்னிந்திய சிற்பகலை படி அங்கு பாலாஜி கோயில் கட்டப்பட்டுள்ளது. அதன் கும்பாபிஷேகத்திற்காக செல்லும் வழியில் ஒரிஸ்ஸாவில் உள்ள பல க்ஷேத்திரங்களை தரிசனம் செய்து கொண்டு தர்ம பிரசாரம் செய்து கொண்டிருக்கிறோம். நாளை அக்ஷய த்ருதியை. அக்ஷயம் என்றால் அழிவு இல்லை ஏற்படாது என்று பொருள். சங்கராசார்யாரின் பஜ கோவிந்தம், கணேச பஞ்சரத்தினம் போன்றவற்றினை படித்து நீங்கள் நலம் யாவும் பெற்று வாழ ஆசீர்வதிக்கிறோம்.



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

**78. ஒருமைக்கட் மான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து**

ஒருவற்கு = ஒருவனுக்கு, ஒருமைக்கண் = ஒருபிறப்பின்கண், தான், கற்ற, கல்வி, எழுமையும் = எழுபிறப்பின் கண்ணும், எமாப்பு = நன்மையைத் தருதலை, உடைத்து.

ஒருவன் என்பது ஒருத்திக்கும் உபலக்ஷணம் காளி தாஸன் குமாரஸம்பவத்தில் தாம் - ஹம்ஸமாலா : நக்தம் - இவ - ஆத்ம தாம்ஹ என்ற சுலோகத்தில் பார்வதியின் வித்யாப்யாஸத்தை வர்ணிக்கும் போது ஆசிரியன் கற்பிக்கத் தொடங்கும் போது ஆசிரியன் கற்பிக்கத் தொடங்கும் போதே முன்ஜன்மங்களில் கற்ற கல்வியெல்லாம் அவன் முன் நின்றன எனக் கூறுதல் நோக்கத்தக்கது.

**79. மேற்பி றந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு**

கல்லாதார் = படியாதவர், மேற்பிறந்தாராயினும் = உயர்ந்த ஜாதியிற் பிறந்திருந்தாலும், பாடு = சிறப்பின் உண், கீழ்ப்பிறந்துங்கற்றா ரனைத்து = தாழ்ந்த ஜாதியிற் பிறந்திருப்பினும் படித்தவரை ஒத்து, இலர்.

உடலோடு அழியும் ஜாதியுனர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வியுணர்ச்சி சிறப்புடைத்து என்றார் பரிமேலழகர்.

மேற்பிறந்தார், கீழ்பிறந்தார் என்ற சொற்களால் ஆசிரியர் வர்ணவிபாகங்களை ஒத்துக் கொள்கிறார் என்பதும், ஸ்தூல சரீரத்தைக் காரணமாகக் கொண்ட ஜாதியைக் காட்டிலும் சூக்ஷ்மசரீரத்தைக் காரணமாகக் கொண்ட கல்வி சிறந்தது என்றமையால், ஸ்தூலசரீரம், ஸூக்ஷ்மசரீரம் இவற்றை ஒத்துக் கொள்ளுகின்றனர் என்பதும், தெளிவாய் விளங்குகின்றன.

இங்கு எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் அந்குடியிற் கற்றோரை வருக என்பர். என்னும் நறுந் தொகையும், வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனுமவன் கட்படுமே என்னும் புறநானூற்றுப் பாடலும் கவனிக்கத்தக்கன. மகாபாரதத்திலுள்ள விதுரர் (உத்யோக பர்வம்) தர்மவ்யாதன் (வனபர்வம் 208 - 216 அத்யாயம்) இவர்களுடைய சரித்திரங்களும் இந்த உண்மையை விளக்கும்.

## 80. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்

(அரசன்), அறன் = தர்மசாஸ்திரத்தை, அறிந்த மூத்த அறிவுடையார் கேண்மை = வயது கல்வி முதலிய வற்றிற் சிறந்த இயற்கையறிவு உடையாது நட்பின தேர்ந்து = ஆராய்ந்து, திறன் = அருமையை, அறிந்து கொளல் = கொள்ள வேண்டும்.

இவ்வதிகாரத்தில் பின்வரும் இரண்டு குறள்களின் மன்னவன், மன்னன் என்ற சொற்கள் இருக்கின்றமையால் இக்குறளும் சிறப்பாக அரசனைப்பற்றிக் கூறியது எனக் கொண்டு அரசன் என்ற சொல் உரையில் வருவிக்கப்பட்டது.

குணமுடையார், பெருவகையால், தர்மஜ்ஞர், சாதுக்கள் இவரை அரசன் போற்றித் தன் வசப்படுத்த வேண்டும் என குணவந்த என்னும் மகாபாரதம் சாந்திபர்வவம் 68வது அத்யாயம் 18வது சுலோகம் கூறுவதை நோக்குக. அறனறிந்து என்றதால் இவ்வாசிரியர் தர்ம சாஸ்திரங்களை ஒத்துக் கொள்கின்றனர் என்பதை அறியலாம்.

### கலை(ந்த)ச் சொற்கள் மார்ச் விடைகள்


1. பாஷ்ய ப்ரவசனம்
2. குன்று தோராடுதல்
3. இளையனார் வேலூர்
4. அத்யாத்ம ராமாயணம்
5. சித்தசுத்தி

### கலைந்தச் சொற்கள் ஏப்ரல் வினாக்கள்

1. ரிட இம்னுளதரிம்னு
2. பா ங்ள்டஷ்யபாக
3. மபிதாஅனசிதான்ணி
4. செய் அறய விம்புரும்
5. ஆம்றுதுவனசி

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்



அகலிகையின் சாபம் நீங்கும் பொருட்டு கௌதமரின் வாக்கை மெய்யாக்க ராமாவதாரத்தை பார்த்தோம். இனி அடுத்த நிகழ்ச்சியைப் பார்ப்போம். கைகேயின் சாபத்தால் நாடிழந்த ராமன் சீதையுடனும் தம்பியுடனும் கானகம் ஏக அங்கிருந்த ரிஷிகள் தம்மை ராக்ஷஸர்களிடமிருந்து காப்பாற்றவேண்டும் என வேண்ட ராமரும் வாக்குறுதி அளிக்கிறார்.

ஒரு சமயம் சீதையை ஒரு ராக்ஷஸன் கவர்ந்துபோய் விடுகின்றான். அவன் அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான்.

கதம் தாபஸயோர்வாம் ச வாஸ:ப்ரமதயா ஸஹ ।। (ஆ 2/11)

தவ வேடம் பூண்டு ஒரு பெண்ணுடன் எப்படி வந்தீர்கள்?

அதர்மசாரிணௌ பரபௌ கௌ வாம் முனிதூஷகௌ<br>அஹம் வனமிதம் துர்தம் விராதோ நாம ராக்ஷஸ:''

அதர்மவழி நடப்பவர்களும் பாபிகளுமான நீங்கள் முனிவர்களை பழிக்கிறீர்கள். நான் ஒரு ராக்ஷஸன் என் பெயர் விராதன், இக்காட்டில் திரிபவன்.

''இயம் நாரீ வராரோஹா மம பார்யா பவிஷ்யதி'' 3

இப்பெண் மிகச் சிறந்தவள், என் மனைவியாவாள்'' இதைக்கேட்ட ராமன் மிகவும் வருந்துவான்.

பரஸ்பர்சாத் து வைதேஹ்யா ந துக்கதரமஸ்தி மே<br>பிதுர் வினாசாத் ஸௌமித்ரே ஸ்வராஜ்ய ஹரணாத் ததா ।। 21

என் அரசு போனதிலும், தந்தை இறந்தது இரண்டையும் காட்டிலும் வைதேஹியை இன்னொருவன் தொட்டான் என்பது துக்கத்தை அதிகமாக்குகிறது. அப்போது லக்ஷ்மணன் சொல்வான்.

*''ராஜ்யச்ச மே மம க்ரோதோ பரதே யோ பபூவ ஹ*
*தம் விராதே விமோக்ஷ்யாமி வஜ்ரீவஜ்ரமிவாசலம்''*

ராஜ்யம் பரதனுக்குப்போய்விட்டது என்ற போது எழுந்த கோபத்தை இவன்மீது இந்த்ரன் வஜ்ராயுதத்தை மலைமீது விடுவது போல் என் பாணங்களால் ஏவி தீர்த்துக்கொள்ளப்போகிறேன். இதனைக்கேட்ட விராதன் நீங்கள் யார் என்று வினவ நாங்கள் க்ஷத்ரியர்கள், காட்டில் வசிக்க வந்துள்ளோம், நீ யார் என்று வினவினர். அதற்கு அவன்

*''புத்ர: கில ஜவஸ்யாஹம் மாதா மம சதஹ்ரதா*
*விராத இதி மாம் ஆஹு:ப்ருத்வியாம் ஸர்வ ராக்ஷஸா:'' ।।*

நான் ஜவரின் மகள். சதஹ்ரதா என் மாதா, என்பெயர் விராதன் என்று உலகில் அனைத்து அரக்கர்களும் கூறுவார்கள்.

*தபஸா ச அபிஸம்ப்ராப்தா ப்ரம்மணோ ஹி ப்ரஸதஜா*
*சஸ்த்ரேண அவத்யதா லோகே அச்சேத்யா த்வயமேவ ச''*

பாணங்களினால் இறப்பின்மை,வெட்டிப் பிளப்பதினாலும் இறப்பின்மை என்று எனக்கு ப்ரம்மா வரமருளினார். ஆகவே இப்பெண்ணை என்னிடம் விட்டுவிட்டு இங்கிருந்து போய்விடுங்கள் என்று கூறி விராதன் சீதையை எடுத்துகொண்டு காட்டிற்கு சென்றுவிட்டான். அப்போது அவள் விராதனிடம் கூறுவாள்.

*''ஏஷ தாசரதீ ராம: ஸத்யவான் சீலவான் சுசி:''*

இவர் தசரதரின் புதல்வர். சத்யவான் நன்னடத்தை உள்ளவர். தூய்மையானவர். சீதையை விட்டுவிட்டு ராமலக்ஷ்மணர்களை விராதன் தூக்கிகொண்டுபோவான். அப்போது சீதை சொல்வாள்.

*'' மாம் ஹர உத்ஸ்ருஜ காகுஸ்தெள நமஸ்தே ராக்ஷஸோத்தம''*
என்னை எடுத்துக்கொள், இவர்களை ராக்ஷஸோத்தமனே விட்டுவிடு

*(தொடரும்)*

# ஸத் விஷய ஸங்கரஹம்

## उपनिषद: உபநிஷத்துக்கள் 108

| | |
|---|---|
| मण्डलब्राह्मणोपनिषत् | மண்டலப்ராம்ஹணோ பநிஷத் |
| दक्षिणामूर्त्युपनिषत् | தக்ஷிணாமூர்த்த்யுபநிஷத் |
| शरभोपनिषत् | சரபோபநிஷத் |
| स्कन्दोपनिषत् | ஸ்கந்தோபநிஷத் |
| त्रिपाद्विभूतिमहाना रायणो पनिषत् | த்ரிபாத்வி பூதிமஹா நாராயணோபநிஷத் |
| अद्वयतारकोपनिषत् | அத்வயதாரகோபநிஷத் |
| रामरहस्तोरायणो | ராமரஹஸ்யோபநிஷத் |
| रामपूर्वतापिन्पुपनिषत् | ராமபூர்வதாபின்யுபநிஷத் |
| रामोत्तरतापिन्पुपनिषत् | ராமஉத்தரதாபின்யு பநிஷத் |
| वासुदेवोपनिषत् | வாஸுதேவவோபநிஷத் |
| मुद्गलोपनिषत् | முத்கலோபநிஷத் |
| शाण्डिल्पोपनिषत् | சாண்டில்யோபநிஷத் |
| पैगलोपनिषत् | பைங்களோபநிஷத் |
| भिक्षुकोपनिषत् | பிக்ஷுகோபநிஷத் |
| महोपनिषत् | மஹோபநிஷத் |
| शारीरकोपनिषत् | சாரீரகோபநிஷத் |
| योगशिखोपनिषत् | யோகசிகோபநிஷத் |
| तुरीयातीतोपनिषत् | துரீயாதீதோபநிஷத் |
| संन्यासोपनिषत् | ஸம்ந்யாஸோபநிஷத் |
| परमहंसपरिव्र जकोपनिषत् | பரமஹம்ஸபரிவ் ராஜகோபநிஷத் |
| अक्षमालोपनिषत् | அக்ஷமாலோபநிஷத் |
| अव्यक्तोपनिषत् | அவ்யக்தோபநிஷத் |
| एकाक्षरोउपनिषत् | ஏகாக்ஷரோபநிஷத் |
| अन्नपूर्णोपनिषत् | அன்னபூர்ணோபநிஷத் |
| सूर्योपनिषत् | ஸுூர்யோபநிஷத் |
| अध्यात्मोपनिषत् | அத்யாத்மோபநிஷத் |
| कुण्डिकोपनिषत् | குண்டிகோபநிஷத் |
| सावित्र्युपनिषत् | ஸாவித்ரியுபநிஷத் |
| आत्मोपनिषत् | ஆத்மோபநிஷத் |
| पाशुपत ब्रह्मोपनिषत | பாசுபத ப்ரம்ஹோபநிஷத் |
| परब्रहोपनिषत् | பரப்ரம்ஹோபநிஷத் |
| अवधूतोपनिषत् | அவதூதோபநிஷத் |
| त्रिपुरातापिन्युपनिषत् | த்ரிபுராதாபின்யுபநிஷத் |
| देव्युपनिषत् | தேவ்யுபநிஷத் |
| त्रिपुरोपनिषत् | த்ரிபுரோபநிஷத் |
| कठरुद्रोपनिषत् | கடருத்ரோபநிஷத் |
| भावनोपनिषत् | பாவநோபநிஷத் |
| रुद्रहृदयोपनिषत् | ருத்ரஹ்ருதயோபநிஷத் |
| योगकुण्डल्युपनिषत् | யோககுண்டல்யுபநிஷத் |
| भस्मजाबालोपनिशत् | பஸ்மஜாபாலோபநிஷத் |
| रुद्राक्षजाबालोपनिषत् | ருத்ரஹ்ருதயோபநிஷத் |
| गणपत्युपनिषत् | கணபத்யுபநிஷத் |
| जाबाल दर्शनोपनिषत् | ஜாபாலதர்சநோபநிஷத் |
| तारमारोपनिषत् | தாரஸாரோபநிஷத் |
| महावाक्योपनिषत् | மஹாவாக்யோபபநிஷத் |
| पञ्चब्रहोपनिषत् | பஞ்சப்ரம்ஹோபநிஷத் |
| प्राणग्रिहोत्रोपनिषत् | ப்ராணாக்நிஹோத் ரோபநிஷத் |

(தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## கோகர்ணன் கதை

1. பிட்சுகன் என்ற பிராமணன் மிகச் செல்வந்தன். அவன் மனைவி துந்தலி என்பவள் அழகானவள். உயர்ந்த வம்சத்தில் பிறந்தவள். ஆனால் தான் சொல்லியதை நிறைவேற்ற வேண்டும் என்ற ஊற்றம் உடையவள்.

2. அந்த பிராமணள், தன் செல்வத்தில் பாதியை தர்மத்திற்காக செய்தான். அப்படியிருந்தும் அவனுக்கு மகனோ, மகளோ பிறக்கவில்லை. அதனால் பெரிதும் மனக்கவலை அடைந்தான்.

3. மனக்கவலையோடு காடு சென்ற அவன் காட்டிலே ஒரு முனிவரைச் சந்தித்தான். பிராமணன் முகத்தில் கவலை நிழலாடுவதைக் கண்ட அந்த முனிவா் "பிராமணரே என் அழுகிறீர்?" என்ன சிந்தனை உம்மை பலம் கொண்டு வாட்டுகிறது. விளக்கமாகச் சொல்லும். உம்முடைய துன்பத்திற்கு என்ன காரணம்?

4. பிராமணர் சொன்னார். "ஐயா, எனக்கு சந்ததி இல்லை. என்னால் கொடுக்கப்பட்ட தர்மம் தேவர்களாலும், அந்தணர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே பிராமணனை விட வேண்டும் என்பதற்காக இவ்விடம் வந்தேன்" என்று

5. அது மட்டுமல்ல என்னால் வளர்க்கப்பட்ட பசுவும் மலட்டுத் தன்மையோடு உள்ளது. என்னால் வளர்க்கப்பட்ட மரங்கள் கூட காயா மரங்களாகவே உள்ளன.

6. மகப்பேறு இல்லாத வாழ்வு மோசம், குழந்தை இல்லாத வீடு பயனில்லை. குழந்தைப்பேறு இல்லாத செல்வமும் வீணே. சந்ததி இல்லாத எங்கள் குலமும் வீணாணதே.

7. ஏதாவது ஒரு கனியைக் கொண்டு வந்தால் அதுவும் என் வீட்டில் பாழாகி விடுகிறது. மகப்பேறு இல்லாத அபாக்யவானான எனக்கு வாழ்வதனால் பயனேது.

8. "அப்பா பிராமணா! மகப்பேறு இல்லையே என்ற அறியாமையை மற. ஒருவன் முற்பிறவியில் செய்த கர்மா வலிமையுள்ளது. எனவே உலகியல் வாழ்வை விடு. விவேகம் கொள்."

9. நான் சொல்வதைக் கேள். உம்முடைய முன்வினை என்னால் நன்கு கவனிக்கப்பட்டது. இந்தப் பிறவி மட்டுமல்ல ஏழு பிறவிகளிலும் உனக்கு மகப்பேறு இருக்கவில்லை.

10. இப்படி சொல்லிய அந்த முனிவர் பிராமணரின் க்ரஹ நிலையை ஆராய்ந்து , அவரிடம் ஒரு கனியைக் கொடுத்து , ''உம் மனைவி இக்கனியை அருந்தினால் உமக்கு சந்ததி உண்டாகும்'' என்றார்.

11. ''ஒன்று கேளும் இந்தக் கனியை அருந்தும் உம் மனைவி ஸத்யம், அகத்தூய்மை, கருணை, ஈகை இவைகளை உடையவளாய் தினமும் ஒரு இறையடியார்க்கு உணவளித்து ஒரு வருட காலம் ஒழுகினால் உமக்கு சந்ததி உண்டாகும்'' என்றார்.

12. கோணல் புத்தியுள்ளவனான அந்த பிராமணர் மனைவி தன் தோழியைப் பார்த்து. '' தோழியே! எனக்கு ஒரே மனக்கவலை. நான் அந்தப் பழத்தைச் சாப்பிட மாட்டேன்'' என்றாள்.

13. தோழியே! குழந்தையை சீராட்டுவது, பாதுகாப்பது எல்லாமே துன்பந்தான். அது மட்டுமல்ல, பிரசவம் வேறு இருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் மலடியாகவோ அல்லது விதவையாகவோ இருப்பதே சுகம் என்பது என் எண்ணம்.

14. ''இப்படிப்பட்ட மனநிலையில் இருந்த அந்தப் பெண்ணின் வீட்டிற்கு யாத்ருச்சிகமாக (திடீரென்று) அவள் தங்கை வந்தாள்.'' அவளிடம் நடந்ததை எல்லாம் சொல்லி ''எனக்கு மிகப்பெரிய மனக்கவலையாய் இருக்கிறது'' என்றாள்.


15. ''எனவே தங்கையே! துக்கத்தால் இளைத்துப்போய் இருக்கிற யான் செய்ய வேண்டியது என்ன?.''அதற்கு அவள் சொன்னாள். ''கவலைப்படாதே நான் இப்போது கருவுற்றிருக்கிறேன். என் குழந்தையை உனக்குக் கொடுக்கிறேன்'' என்றாள்.

16. ''நான் ப்ரசவிக்கும் காலம் வரை நீ கருவுற்றது போல வீட்டில் இரு. எனக்குக் குழந்தை பிறந்ததும் என் கணவருக்குப் பணத்தைக் கொடுத்து நீ என் குழந்தையைக் கேள். அவர் கொடுத்து விடுவார்'' என்றாள்.

17. ''முனிவர் கொடுத்த பழத்தை சோதிப்பான் வேண்டி உன் வீட்டில் இருக்கும் பசுவிற்கு கொடுத்து விடு'' என்று சொல்லி அப்படியே அந்த பெண்கள் அவர்களுக்கே இயல்பான பெண் புத்தியுடன் நடந்து கொண்டார்கள்.

(தொடரும்)

# குரு கடாக்ஷம்



மனுஷ்யர்களில் ஸாதாரணமாகப் பொய்யன், யோக்யன், மஹான் என்று மூவகை உண்டு. உண்மை ஒருவாறு இருக்க வாக்கு வேறாகச் சொல்பவன் பொய்யன். அநாயாஸமாகக் கூறும் வாக்கு எவரிடமும் முக்காலமும் உண்மையாகி விடுகிறதோ அவர் மஹான். மஹானுடைய வாக்கை நிறைவேற்றிவைக்க தாஸர் போல் அர்த்தம் காத்திருந்து கூட ஓடி வரும்.

ஸஹஸ்ரநாமாக்களில் 'கோவிந்த' நாம ஸங்கீர்த்தனத்தை உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று இல்லாமல் நான்கு வர்ணத்தார்களும் மூன்று மதத்தினர்களுர் ஹிந்து என்று சொல்லிக்கொள்ளும் எல்லோரும் ஏகாக்ரசித்தத்தோடு செய்து வருகிறார்கள். ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்கு மேலோக இக்கீர்த்தனையைச் சொல்லியே பெரிய கூட்டங்களில் அமைதி உண்டாக்கினார்கள். காரணமென்ன? 'பஜகோவிந்தம்' என்ற ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்களின் வாக்கேயாகும். இந்த விஷயத்தை அறிந்த எல்லோரும் நம் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் ஒரு பெரிய மஹான் என்று மிக எளிதில் நிச்சயித்துக் கொள்ளலாம்.

மேலும் ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வாசாரியர் இவர்கள் ஆசார்யஸ்தானம் அடைந்து ஸ்ரீ பகவத் கீதையைப் பராயணம் செய்து அதற்குப் பாஷ்யம் எழுதியதுடன் தங்கள் மத ஸித்தாந்தத்திற்கு அந்த ஸ்ரீ பகவத் கீதா கிரந்தத்தையே ஆதாரமாகக் கொண்டார்கள். ஏன்? அது ஒரு தேவலோக புஷ்ப விமானம்போல் அவரவர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் இடம் தருகிறது. இதற்குக் காரணம் 'பகவத் கீதா கிஞ்சித தீதா கங்காஜல லவ கணிகா பீதா. ஸக்ருதபி யே ந முராரி ஸமர்ச்சா கிரியதே தஸ்ய, யமோ பி ந சர்ச்சா' என்ற வாக்கு. இந்த வாக்கை நிறைவேற்றவே அந்த ஆசார்யர்களுக்குத் தேவையான அர்த்தங்களும் ஸ்ரீ பகவத் கீதையில் வரும்படி செய்தது. நம் ஆதிசங்கரர் வாக்கைக் கௌரவிக்கத்தான் கீதையின் முதலில் ஏன் விசனப்படுகிறாய் என்றும் கடையில் 'மாசுச:' நீ விசனப்படாதே என்றும் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குச் சொல்லுவதுபோல் ஸகல ஜனங்களுக்கும் சொல்லி கவலையை நீக்குகிறார். இந்தக் கீதா அமிருதத்தை புத்தி என்ற வாக்கினால் ஒவ்வொருவரும் பானம் எண்ண வேண்டும் என்பதே ஆதிசங்கரரின் கருத்து.

ஆகையால் ஹிந்து என்ற ஒவ்வொருவரும் கீதையில் தினம் ஒரு சுலோகமாயினும் பாராயணம் செய்ய வேண்டும். கங்காஜலம் சிறிதேனும் உட்கொள்ள வேண்டும். பிரத்யக்ஷ கங்கை கிடைக்காதவர் எந்த ஜலம் கிடைக்கிறதோ அதை ஸாலக்ராமத்திற்கு அபிஷேகம் செய்து அதை உட்கொள்ள வேண்டும். விஷ்ணு தீர்த்தபாதர். அவர் பாத ஸ்பர்சத்தால் எந்த ஜலமும் கங்கா ஜலத்திற்கு ஸமான தீர்த்தமாகிவிடும் குரு கடாக்ஷம் பெற விரும்புவோர் குருவின் வாக்குக்குக் கீழ்படிய வேண்டும். மேலே சொன்னது குருவாக்கு. ஆகையில் இந்த இரண்டு காரியங்களை மாட்டிலும் செய்தாலே குரு கடாக்ஷம் பரிபூர்ணமாக ஏற்படும். அதன்மூலம் ஸமஸ்த மங்களங்கள் உண்டாகி ஜீவன் முக்தர்களாகலாம்.

– நன்றி : ஆர்யதர்மம் 1943

## ஸனாதன தர்மப் புதிர்கள் மார்ச்விடைகள்

*1*. கொடுங்காலூர்

*2*. மூன்று வகை

*3*. ஒன்றரை மணி

*4*. காசி

*5*. மத்யப்ரதேசம்

*6*. த்ரயம்பகம்

*7*. உள்ளங்கை நெல்லிக்கனி

*8*. சந்த்ரஹாஸம்

*9*. மூன்று கௌண, முக்ய, மித்யா


*10*. லக்ஷ்மீ

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஏப்ரல் வினாக்கள்

1. பாரததேசம் முழுதும் வாழ் நாள் முழுவதும் தர்பைப் புற்களால் நிரப்பி யாகம் செய்தவன்.
2. அம்பாளின் விஷ்ணுசக்தி பீடம்.
3. ஸ்ரீருத்ரத்தை வைத்து செய்யப்படும் பாராயணம்.
4. ஸ்தாலீ புலக ந்யாயம் தமிழில் என்ன?
5. மகா நதியின் உத்பத்தி ஸ்தானம்.
6. கோமளா தண்டகம் எழுதியது யார்?
7. தீக்ஷிதரின் க்ருதிகளில் அவருடைய முத்ரை என்ன?
8. பழனி முருகன் யாரால் செய்யப்பட்டது?
9. எந்த க்ரஹத்திற்கு எள் ப்ரீதி ?
10. தக்ஷிணாமூர்த்தியின் இரு உருவங்கள்

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 12

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்



வேதத்தின் விளக்கமே சௌந்தர்யலஹரீ

வேதத்தில் யா தே ருத்ர சிவா தனூ;சிவா விஸ்வாஹ பேஷஜீ

சிவா ருத்ரஸ்ய பேஷஜீ தயானோ ம்ருட ஜீவஸே''

எனும் மந்த்ரம் வருகிறது. இதன் விளக்கம்தான் ஸௌந்தர்யலஹரியின் முதல் ஸ்லோகம் என்று பெரிவா விளக்கினார். ''

யா தே ருத்ர சிவா தனூ: சிவா விஸ்வாஹ பேஷஜீ; ''சிவா ருத்ரஸ்ய பேஷஜீ தயா நோ ம்ருட ஜீவஸே'' ஏ ருத்ரனே என்னாளும் பரம மங்களமாக உன் உடலின் பகுதி உள்ளது. அது அம்பாள் மயமானது. அந்த உடல் உனக்கும் மருந்தாக உள்ளது. அந்த மங்களமான உடலால் எம்மை வாழ்விக்கவேண்டும்'' இது மன்த்ரத்தின் பொருள்.

ஆனால் பெரிவா ஜீவஸே என்பதற்கு இரண்டாபக்ஷமாக பொருள் கூறாமல் முதல் பக்ஷமாக வாழ்கிறாய் என்று பொருளை வைத்து ''ஏ ம்ருடனே அந்த உமையாகிய மங்களகரமான பாகத்தினால் அன்றோ நீர் வாழ்கிறீர்'' என்று சொல்லி இதை விளக்குவதாகவே சௌந்தர்ய லஹரியின் முதல் ஸ்லோகம் துவங்குகிறது. வேதப்பொருளை ஆதிசங்கரர் தெளிவாக விளக்குகிறார். என்று கூறிய நம் பெரிவா ஆதிசங்கரரின் மறு அவதாரமே என்று எனக்கு ஊர்ஜிதம் ஆனது.

ஸ்ரீ ருத்ரம் விளக்குவது பரமேஸ்வரன் தான் எல்லா வடிவங்களிலும் இருக்கிறான் என்று ஸ்ரீருத்ரம் கூறும். சிவனுடைய விஸ்வரூபத்தன்மையை நமோ வ்ருக்ஷேப்யோ என்று ஆரம்பித்து எட்டு அனுவாகங்களில் விளக்கும். அதன் நிரூபணம் என்ன?இதன் நிரூபணம் தான் பொய்க்கால் குதிரையாட்டம் நெடு நாளாக வருகிறது என்று பெரிவா விளக்கினார். அதில் 'அஸ்வேப்யோ அஸ்வபதிப்யச்ச வோ நம:'' என்று குதிரையாயும் அதை ஓட்டுபவனாயும் உள்ள சிவனுக்கு நமஸ்காரம் என்று கூறுகிறதல்லவா. பொய்க்கால் குதிரையாட்டத்தில் ஒருவனே குதிரையாகவும் அதை ஓட்டுபவனாகவும் உள்ளான். இக்கலை இம்மந்த்ரத்தில் விளக்கமாக உள்ளது என்று விளக்கினார் பெரிவா.

## ஸ்ரீ ராம நாம ஸம்கீர்தனம்
## ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனை.


## भज रे रघुवीरम् मानस भज रे बहुवीरम्

अम्बुदटिम्बविटम्बन गात्रम् अम्बुदवाहननन्ददात्रम् (भज)
कुशिकसुतापितकार्मुकवेदम् वशिहृदयाम्बुजभास्करपादम् (भज)
कुण्डलमण्डनमण्डितकर्णम् कुण्डलिमन्जकमत्बुतवर्णम् (भज)
दण्डितसुन्दसुतादिकवीरम् मण्डितमनुकुलमाश्रय शौरिम् (भज)
परमहम्समखिलागामवेध्यम् परमवेदमकुठीप्रतिपाद्यम् (भज)

மோஹன ராகம் பஜ ரே ரகுவீரம் ஆதி தாளம்
பஜ ரே ரகுவீரம் மானஸ பஜ ரே பஹுதீரம்

**அம்புதடிம்பவிடம்பனகாத்ரம் அம்புதவாஹனனந்தனதாத்ரம் (பஜ)**
**குசிகஸுதார்பிதகார்முகவேதம் வசிஹ்ருதயாம்புஜபாஸ்கரபாதம் (பஜ)**
**குண்டலமண்டனமண்டிதகர்ணம் குண்டலமன்சகமத்புத்வர்ணம் (பஜ)**
**தண்டிதஸுந்தஸுதாதிகவீரம் மண்டிதமனுகுலம்ஆஸ்ரயசௌரிம் (பஜ)**
**பமஹம்ஸமகிலாகமவேத்யம் பரமவேதமகுடீப்ரதிபாத்யம் (பஜ)**

*பொருள் : ரகுவீரனை ராமனை வழிபடுவாய். மனமே மிகுந்த தீரனை ராமனை வழிபடுவாய். மேகக்கன்றையொத்த திருமேனியுடையவனும் மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்த்ரனின் மகனான வாலிக்கு அரிவாளானான ரகுவீரனை குசிக முனிவரைன் புத்ரரான விஸ்வாமித்ரரால் தனுர்வேதத்தைப் பெற்றவனும், இந்த்ரியங்களை வஸ்யப்படுத்தியவர்களின் (ஹனுமான் முதலியவர்களின்) இதயத் தாமரைகளுக்குச்சூர்யனாக அமைந்த பாதங்களையுடையவனுமான ரகுவீரனை 2 திருக்குண்டலங்களைஅணிந்த திருச்செவி உடையவனும், அத்புத நிறமுடையவனும், குண்டலி எனும் ஆதாரத்தைக் கட்டிலாகக் கொண்டவனுமான ரகுவீரனை 3 ஸுந்தன் மகனான மாரீசன் முதலியவர்களைத் தண்டித்த வீரனும் மனுவின் குலத்தை விளங்கச் செய்தவனும், புகலிடமான விஷ்ணுவை 4 பரமஹம்ஸனாய் எல்லா ஆகமங்களால் அறியத்தக்கவனாய் வேதங்களுக்கு மகுடங்களான சிறந்த உபநிஷத்களில் நன்றாக அறிவிக்கபட்டவனான ரகுவீரனை வழிபடுவாய்.*



# பூஜ்யஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் நூதன பிருந்தாவன பிரதிஷ்டை - முதலாவது வார்ஷிக ஆராதனை

-------------

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 69வது பீடாதிபதியாக விளங்கிய பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஹேவிளம்பி வருடம் பால்குன (மாசி) மாதம் சுக்லபக்ஷ த்ரயோதசியில், 2018, பிப்ரவரி 28ஆம் தேதி விதேஹ முக்தி அடைந்தார். அதனைத் தொடர்ந்து 12 மாதங்களும் ஆராதனை மஹோத்ஸவம், பாகவத சப்தாஹங்கள், வேத பாராயணங்கள் நடைபெற்றன. ப்ருந்தாவன ப்ரதிஷ்டை நிகழ்வை ஒட்டி ஒரு மாத காலமாக சிறப்பு சதுர்வேதபாராயணங்கள், பரம புருஷ ஆராதனை, கேசவாதி போஜனம், சுவாஸினி பூஜைகள் ஆகியவை விமரிசையாக நடைபெற்றது.

அதனை தொடர்ந்து மார்ச் மாதம் 10ஆம் தேதி பால்குன (மாசி) சுக்ல சதுர்த்தியில் பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் சமாதி ஸ்தலத்தில் ப்ருந்தாவனங் கருங்கல்லால் செய்யப்பட்ட துளசி மாடம் ப்ரதிஷ்டை நடைபெற்றது. அதற்கு முன்பு ப்ரதிஷ்டை செய்யப்பட்ட நூதன ப்ருந்தாவனத்தை பக்தர்கள் அனைவரும் தரிசிப்பதற்காக மார்ச் 9ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் நான்கு மாட வீதி மற்றும் நான்கு ராஜ வீதி வழியாக கரிக்கோல ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்து. ஸ்ரீமடத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் மங்கள வாத்யம், கிராமிய கலைகளான கரகாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், பொய்க்கால் குதிரை ஆகியவையும் செண்டமேளம், கிராம பஜனைக் குழுவினரின் கலை நிகழ்ச்சி மற்றும் வாணவேடிக்கை ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஊர்வலம் வரும் வழிகளில் பொதுமக்கள், பக்தர்கள், சமுதாய பெருமக்கள் அனைவரும் தரிசனம் செய்து மலர் தூவி வழிபட்டனர்.

10-03-2019 அன்று ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை, வேதபாராயணங்கள், ஹோமங்களின் பூர்ணாஹுதி நிறைவு பெற்று காலை 11.30 மணியளவில் ஸ்ரீஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் நூதன பிருந்தாவன பிரதிஷ்டை நடைபெற்றது. இந்த வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து

கொண்டனர். இந்த நூதன ப்ருந்தாவனம் ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் வழிகாட்டுதல்படி அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் ஸ்ரீமடத்து ஆஸ்தான ஸ்தபதிகளான ஸ்ரீ சுப்பையா ஸ்தபதி மற்றும் அவரது மகன் ஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்தபதி ஆகியோரால் மிக அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஒரே கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ப்ருந்தாவனம் 2 அடி உயரம் கொண்ட அடிபாகம், 4அடி உயரம் கொண்ட மேல்பாகம் என இரண்டு பாகங்களாக அமைத்துள்ளது. இதன் கிழக்கு பக்கம் மன்னார்குடி ராஜகோபால சுவாமியும், மேற்கு பக்கம் துவாரகை கிருஷ்ணரும், வடக்கு பக்கம் பாண்டவதூத கிருஷ்ணரும் தெற்கு பக்கம் குருவாயூர் கிருஷ்ணரும் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. ஆதார பீடமான அடிபாகத்தில் எட்டு யானைகள், எட்டு நாகங்கள், எட்டு சிங்கங்கள் அமையப் பெற்றுள்ளன.

## ஸ்ரீ பெரியவாளின் முதலாவது ஆராதனை

ஸ்ரீஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் முதலாவது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம் மிகச்சிறப்பான முறையில் 17-03-2019 அன்று தொடங்கி 19-03-2019 வரை நிகழ்ந்தது. ஆராதனை தினமான 19.03.2019 அன்று புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட ப்ருந்தாவனத்திற்கு சிறப்பு மலரலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை, வேத பாராயணங்கள், நிறைவுபெற்று பகல் சுமார் 2.30 மணியளவில் தீர்த்த நாராயண பூஜை நடைபெற்றது. அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம், அக்ஷதை பிரசாதம், அன்ன ப்ரசாதம் ஆகியவை வழங்கப்பட்டது. ஆராதனை நிகழ்வையொட்டி நடைபெற்ற பல்வேறு நிகழ்சிகளில் பல மடாதிபதிகள், ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் பல முக்யஸ்தர்கள் கலந்துகொண்டனர். அன்று மாலை ஸ்ரீ பெரியவாளுக்கு ஸ்ரத்தாஞ்சலி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ''ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் நினைவலைகள்'' என்ற புத்தகமும் அன்று வெளியிடப்பட்டது. அதனை தமிழக ஆளுநர் மேதகு பன்வாரிலால் புரோஹித் அவர்கள் வெளியிட ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பெற்றுக்கொண்டார். ஆராதனை மஹோத்ஸவ சிறப்பு தபால்தலையும் மேதகு ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்டது. ஆராதனையை யொட்டி ஸ்ரீ கோவிந்த கிரிஜி அவர்கள் வழங்கிய பாகவத உபன்யாஸம் (இந்தி) மற்றும் பாராயண நிகழ்ச்சி ஸ்ரீமடத்தில் 11.03.2019 தொடங்கி 18.03.2019 வரை நடைபெற்றது.

# ருத்ர கீதை

*சின்னவன்*

*கீதா எனும் ஸம்ஸ்க்ருதச் சொல்லை கீதை என்று தமிழில் கூறுகிறோம். கீதா எனும் சொல்லுக்கு கவிதை முறையில் நிகழும் உரையாடல் பற்றிய நூல் என்று விளக்கம்.*

*பொதுவாக கீதை என்று சொன்னால் பகவத் கீதைதான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு ப்ரஸித்தம். குருக்ஷேத்ரத்தில், போர்களத்தில் க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தது பகவத்கீதை. இது த்வாபர யுகத்தில் நடந்தது. இதற்கு முன் யுகமான த்ரேதாயுகத்தில் ராமரால் உபதேசிக்கப்பட்ட கீதை ராம கீதை எனப்படும்.*

*இதற்கும் முன் யுகத்தில் க்ருதயுகத்தில் வாழ்ந்த த்ருவனைப் பற்றி அறியாதவர்கள் கிடையாது. இவனால் தான் பூமிக்கு ப்ருத்வீ எனும் பெயர் வந்தது. இவன் சரிதத்தை ஸ்ரீமத் பாகவதம் 4ஆம் ஸ்கந்தத்தில் 24ஆவது அத்யாயத்தில் கூறுகிறது. அதில் வருவது தான் ருத்ரகீதை. இதைக் கூறுவதற்கு முன் இது தோன்றுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்வது பயனுள்ளதாக இருக்கும்.*

*ப்ரதுவின் மகன் வ்ருத்தஸ்ரவன். இவனுக்கு அந்தர்தானன் என்றொரு பெயருமுண்டு. இவன் மனைவியின் பெயர் நபஸ்வதி. ஹவிர்தாஸன் இவர்கட்கு மகன். இவளுடைய மனைவி ஹவிர்தானி. இவர்களுடைய மகன்கள் 1. பர்ஹிஷதன், 2.கயன், 3. சுக்லன், 4. க்ருஷ்ணன், 5.ஸத்யன், 6. ஜிதவ்ரதன், பர்ஹிஷதன் பூமியில் இடமே இல்லாமல் யாகம் செய்தவன். இதனால் பூமியில் கிழக்கு நோக்கி பரப்பப்பட்ட தர்பைகள் நிறைந்து இருந்தன.*

*அதனால் இவனுக்கு ப்ராசீன பர்ஹிஸ் எனும் பெயர் வந்தது. இவன் சதக்ருத் என்பவளை மணக்க இவர்களுக்கு 10 பிள்ளைகள் பிறந்தனர். பர்ஹிஷதன் அவர்களை படைக்க உத்தரவிட்டான். அவர்களோ தவம் செய்ய கடலில் புகுந்தனர். அங்கு அவர்கள் பத்தாயிரமாண்டுகள் தவம் செய்தனர். அங்கு அவர்கள் முன் சிவபெருமான் தோன்றி அவர்கட்கு உபதேசித்ததைத் தான் அவர்கள் பின்பற்றினர். இவ்வரலாற்றை விதுரருக்கு மைத்ரேயர் கூறுகிறார். தவம் செய்யச் சென்ற ப்ரசேதஸ்கள் ஒரு பெரிய ஏரியைக் கண்டனர். அதிலிருந்து தன் பரிவாரங்களுடன் சிவபெருமான் வருவதைக் கண்டு வீழ்ந்து வணங்கினர். அவர்களிடம் சிவன் கூறினார்.*

ப்ரசேதஸ்களே உமது விருப்பத்துக்கு இணங்க, உங்களுக்கு அருள் புரிய நான் தர்சனம் அளித்தேன். உங்களுக்கு மங்களம் உண்டாகுக. ''எவர் ப்ரக்ருதி ஜீவனைக்காட்டிலும் மேலான ஸ்ரீமன் நாராயணனை அடைக்கலம் புகுந்தவனோ அவர் எனக்குப் ப்ரியமானவர்கள். '' நீங்கள் பகவானது பக்தர்கள் என்பதால் எனக்குப் ப்ரியமானவர்கள்.

இப்போது உங்களுக்கு எல்ல நலங்களையும், மோக்ஷத்தைத் தரக்கூடிய மங்ககலமான துதியைக் கூறுகிறேன். அதை ஜபியுங்கள் என்றார். இவர் உபதேசித்ததுதான் ''ருத்ரகீதம்'' பகவானிடம் முழு நம்பிக்கையுடன் இத்துதியை ஜபியுங்கள். அவர் எல்லா நலங்களையும் அருளுவார். முன்பு ப்ரம்மா படைப்பைத் தொடங்கும்முன் எனக்கு உபதேசித்தார். என்று கூறி மறைந்தார். ப்ரசேதஸ்களும் அதை பத்தாயிரமாண்டுகள் ஜபித்து நலமடைந்தனர். இது முன்னுரை இனி ருத்ரகீதம் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.



ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா திருவடிகளே சரணம்
ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர

ÿ ÿ ÿ © í õ ö£›¯Áõ ÁõÈz v ¸ |õ©®

வைகாசி அனுஷம் தனில் வந்துதித்தோள் வாழியே
மஹாலக்ஷ்மி அம்மா பெற்றெடுத்த தெய்வமாமுநி வாழியே
ஓங்கு புகழ் ஸ்ரீ காமாட்க்ஷியை சரண் அடைந்தோன் வாழியே
பகவத் பாதாள் வழி வந்தோன் வாழியே
கச்சியம்பதி சிறக்க வந்தோன் வாழியே
அடியார்களை வழி நடத்துவோன் வாழியே
வேதம் அனைத்தும் உய்விக்க வந்தோன் வாழியே
பாரோர்க்கு அத்வைதம் எடுத்துரைத்தான் வாழியே
திருத்தி பணிகொள்ள வந்த அவதாரம் வாழியே
எழில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா பொற்பாதங்கள் வாழி வாழியே !

தாஸன்
பெரிய நம்பி **V. ஜெயராமன் அய்யங்கார்**
பெரிய நம்பி திருமாளிகை, ஸ்ரீ வைகுண்டம்

லோக க்ஷேமம் ஸதா யோக க்ஷேமம் ஸதா

ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி

சிவமஸ்து சர்வம்

# ஸ்ரீ மஹா பெரியவரின் அத்வைதம்

அத்வைதம் என்பதன் அர்த்தம் என்ன? இரண்டாவது இல்லாதது என்பதுதான் அதன் அர்த்தம். இரண்டாவது இல்லை என்பது நமக்கு உண்மையாகத் தோன்றுகிறதில்லை. ஆயிரக்கணக்கான வஸ்துக்கள் இருக்கின்றன. அப்படி இரண்டாவது இல்லாததனால் நமக்கு என்ன லாபம்? அதனாலேதான் நாம் எதற்காகப் ப்ரயத்தனம் செய்கிறோமோ அது கை கூடும். நமக்கு வரும் கஷ்டமெல்லாம் நிவர்த்தியாக வேண்டுமென்று பாடுபடுகிறோம். அந்தக் கஷ்ட நிவர்த்தி இந்த அத்வைத்தால் உண்டாகும். எந்த ஊரிலாவது இந்த கஷ்டம் இல்லாமல் இருக்கிறதா? இல்லை. ஆனால் நாம் துக்க நிவர்த்திக்காக ப்ரயத்தனம் பண்ணிக் கொண்டேயிருக்கிறோம். நம்முடைய லௌகிக ப்ரயத்னங்களால் தற்கால சாந்திமட்டும் உண்டாகிறது. இப்படி உள்ள கஷ்டங்களை நீக்கவதற்கு நிரந்தரமான உபாயம் அத்வைதம்.

நாம் ஏன் துன்பப்படுகிறோம்? தரித்ரம், பசி முதலிய எல்லாம் நமக்கு இல்லாமல் இருந்தால் நல்லது. ஆனால் அவை ஏன் வருகின்றன? அவை வரும் வழி எது என்று பார்ப்போம். நமக்குப் பசி, வ்யாதி முதலியவைகளால் துன்பம் உண்டாகிறது. இவைகளெல்லாம் உடம்பு இருக்கும் வரைக்கும் இருக்கும். இந்த உடம்பு போய்விட்டால் மற்றோர் உடம்பு வருகிறது. அந்த உடம்புக்கும் பசி, தாகம், வ்யாதி முதலியவைகளெல்லாம் வருகின்றன. ஆகவே உடம்பில்லாமல் பண்ணிவிட்டால் நமக்கு இந்தக் கஷ்டங்களெல்லாம் இல்லாமற் போகும். நமக்குப் பல பிறவிகள் உண்டாகின்றன. அந்தப் பிறவிகளுக்கெல்லாம் காரணம் என்ன? உடம்பு எதனால் வருகிறது? முன் ஜன்மத்தில் பண்ணிய பாப புண்ய பலன்களை நாம் அனுபவிக்க வேண்டும். ஆத்மாவால் அனுபவிக்க முடியாது. ஆத்மாவை நெருப்பால் சுட முடியாது. ஆகையால் ஒரு உடம்பு வேண்டியிருக்கிறது. நாம் செய்த பாப புண்ய பலனாகக் கடவுள் நமக்கு உடம்பைக் கொடுத்து அதையே ''நான்'' என்று நினைக்கச் செய்து தண்டிக்கிறார். ஆகையால் நாம் பண்ணுகிற பாபம் உடம்புக்குக் காரணம். இனிமேல் பாபம் பண்ணாமல் இருந்தால் வராது. பாபம் பண்ணக் கூடாது என்ற நினைவு தினமும் இருக்க வேண்டும்.

பாப புண்யத்துக்குக் காரணம் என்ன? அவற்றைச் செய்யாமல் நிறுத்த இஷ்டமிருக்கிறது; ஆனால் முடியவில்லை ஏன்? பாபத்துக்குக் காரணத்தை அறிந்து அதை அழிக்க வேண்டும். கெட்ட காரியத்தினுடைய பலன் பாபம். கெட்ட காரியம்

எதனாற் செய்கிறோம். பாபம் செய்யக் காரணம் ஆசை. ஒரு வஸ்து அழகாக இருந்தால் ஆசை உண்டாகிறது. நல்ல பதார்த்தங்களைக் கண்டால் வேண்டுமென்று ஆசை தோன்றுகிறது. அது நல்லது என்ற ஒரு ஞானம் இச்சையயை உண்டாக்குகிறது. அந்த இச்சையைப் பூர்த்தி பண்ணக் காரியங்கள் செய்கிறோம். இந்த்ரியங்கள் ஒன்றை அழகானதென்று அறிவதுதான் ஆசைக்குக் காரணம். ப்ரயத்னத்தால் இச்சையை உண்டாக்கலாம், மாற்றலாம்; ஞானத்தை உண்டாக்கவும் முடியாது மாற்றவும் முடியாது.

அந்தப் பாப காரணமாகிய ஆசையை நிவர்த்தி பண்ணினால் துக்க நிவர்த்தி உண்டாகும். அந்த ஆசையை எப்படி நிவர்த்திப்பது? இந்தத் துக்க நிவர்த்தி பண்ணுவதை எப்படி என்று இதர சாஸ்திரங்கள் வழி சொல்லாமல் விட்டு விட்டன.

ஆனால் வேதத்துக்குச் சிகரமாக இருக்கும் வேதாந்தம் இந்த துக்க நிவர்த்திக்குக் தக்க வழியைச் சொல்கிறது.

த்வேஷமும் ஆசையும் நமக்கு அந்யமாக இருக்கும் வஸ்துக்களிடத்தில் தான் உண்டாகின்றன. நம்மிடத்தில் நமக்கு ஆசையும் வெறுப்பும் உண்டாவதில்லை. வேறேயாக உள்ள பொருள்களிடத்தில் ஆசை உண்டாவதால் அவைகளை நாமாகப் பண்ணிவிட்டால் அது உண்டாகாது. ஆசை இல்லாவிட்டால் ப்ரயத்னம் இல்லை. அதனால் பாபம் இல்லை. பாபம் இல்லாபொழுது தேஹம் இல்லை. அது இல்லாவிட்டால் துக்கம் இல்லை.

\- ஸ்ரீசங்காராசார்ய ஸ்வாமிகள்


|| ஸ்ரீ: ||

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.

பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை

Typeing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி

எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.

க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்

எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.

(Transliteration in all Languages done here.)

Grantham to Devanagiri, Grantham to Tamil,

மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்

உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்

அச்சிட்டு தரப்படும்.

**Contact : V.K.N. Enterprises (Printer)**

Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# வால்மீகி ப்ரதீபம் 50

இளம்பூரணர்.

## ''நான்'' ராமரின் நாணம்

99 ஆத்மானம் மானுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம்
யோஹம் யஸ்ய யதாச்சாஹம் பகவான் தத் ப்ரவீது மே ॥
அக்ஷரம் ப்ரம்ம ஸத்யம் ச மத்யே சாந்தே ச ராகவ
லோகானாம் த்வம் பரோ தர்மோ
விஷ்வக்ஸேனஸ்சதுர்புஜ: ॥

அயோத்யாகாண்டம் 120 12, 15

என்னை தசரதரின் புதல்வன், மானுடன் என்று அறிவேன். ஆகவே நான் யார் யாருடைய சம்பந்தம், எது காரணமாக பிறந்தவன் இதை ப்ரம்மதேவர் விளக்கட்டும். ஸ்ரீராகவா தேவரீர் எதற்கும் முந்தியும், இடையிலும் முடிவிலும் அழிவற்றதாய் இருக்கும் ப்ரம்மம். உலகுக்கு மேன்மைஸ்வரூபி, தர்மஸ்வரூபி, நான்கு புருஷார்த்தங்களை அளிப்பவர்.

ராமராவண யுத்தம் நடந்து சீதை அக்னியில் புக, ப்ரம்மாதி தேவர்கள் ராமருடைய உண்மை ஸ்வரூபத்தைக் கூறுகிறார்கள். அப்போது அவர் தான் ராமர் எனும் மானிடர், தசரதரின் புதல்வன் என்கிறார்.

மீண்டும் ப்ரம்மாதி தேவர்கள் அவருடைய ஸ்வரூபத்தை எடுத்துச் சொல்கிறார்கள். முதலில் அவர்கள் துதித்தபோதும் பின்பு அவர் கேட்டபடி தன் ஸ்வரூபம் தெரிந்தபின்னும் ராமர் எவ்விதமான மாறுதலையும் அடையவில்லை. சாந்தனாய் தாந்தனாய் ஸ்திதப்ரக்யனாய் இருந்தார். உண்மை ஸ்வரூபம் தெரிந்தபின்னனும் தாட்பூட் செய்யவில்லை. தான் ஆத்மவான் என்பதை காட்டுகிறார்.

அதிமானுஷனாய் பலகார்யங்களைச் செய்த போதும் அடக்கமே உருவாக இருந்தார். அதுவே அவரது பெருமை. நம்மை எடுத்துக் கொள்வோம். சின்ன கார்யம்தான் செய்திருப்போம். தம்பட்டம் அடித்துக் கொள்வோம். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் புத்தகம் எழுதினார். அதுவே அவரது முதல் கடைசி புத்தகம். அரசியல் நட்பு நிறைய அதை வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து புத்தகததை வெளியிட்டார். அதோட சரி. ஒரு பதிப்புக்குப் பின் புத்தகம் வரவில்லை. பலபேர் இப்படித்தான் இருக்கிறோம். அமரருள் உய்க்கும் அடக்கம் வரவில்லை. எப்போது வரும் தெரியவில்லை. கொஞ்சம் முயல்வோம். ராமரை நினைப்போம் அமரராக முயல்வோம்.

## 'ராமராஜ்யம்'' உடோபியாவா

100 ஸ ராஜ்யமகிலம் ஸாஸன்னிஹிதாரிர்மஹாயசா:
ராகவ: பரமோதார: சஸாஸ பரயா முதா
ஸர்வம் முதிதமேவாஸீத் ஸர்வோ தர்மபரோ அபவத்
ராமமேவனுபஸ்யந்தோ நாப்யஹிம்ஸன்பரஸ்பரம்
ஆஸன் வர்ஷஸஹஸ்ராணி ததாபுத்ர சஹஸ்ரிண:
நிராமயா விசோகா ராமே ராஜ்யம் ப்ரஸாசதி ॥
ராமோ ராமோ ராம இதி ப்ரஜானம் அபவன் கதா:
ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஸாஸதி ॥

ராமர் மிக்க மகிழ்ச்சியுடன் நாட்டை ஆண்டார். மக்கள் அனைவரும் மகிழ்வெய்தினர்.

ராமரையே எண்ணிக் கொண்டு ஒருவரை ஒருவர் இம்சிக்கவில்ல. ராமரின் ஆட்சியில் பிணி இல்லை, சோகமில்லை, புத்ர பௌத்ரர்களுடன் மக்கள் இன்பமாய் இருந்தனர். ராம ராம என்று அயோத்தியில் மட்டுமில்லை உலகம் முழுதும் ராமமயாகியது. மேலே கூறியவை அனைத்தையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. நடக்குமா என்று ஐயம் நடந்தால் அதைவிட மகிழ்ச்சி இல்லை. உடோபியா அதாவது கற்பனை ராஜ்யம் என்று கூறுவர். அதாவது அதில் எல்லாம் நிறைந்து இருக்கவேண்டும்.

மக்களுக்குக் குறையே இருக்கக்கூடாது. மேலே சொன்னவை அப்படித்தான் உள்ளன. ஸாத்யாமா என்றால் அக்காலத்தில் ஸாத்யம் ஆனது. ஏனெனில் ஆள்பவரின் நேர்மை, ஸத்யம், அன்பு. கலியில் அப்படிப்பட்ட அரசனில்லை. ஆட்சியும் அப்படி அமையாது. ராமராஜ்யம் பற்றி விரிவாக பேசும் அளவிற்கு விஷயம் உண்டு. விரிவஞ்சி இங்கு கூறவில்லை. காந்தி நினைத்ததும் இதுதான்.

MONAARCHY எனும் ராஜரீதியில் இருந்தாலும் அக்காலத்தில் ஜனனாயகப் பண்பு உள்ளவர்களாக மன்னர்கள் இருந்தார்கள். இப்போது ஜனனாயகம் பேசினாலும் தான் MONAARCHY நடைபெறுகிறது. இப்போது சாத்யமில்லை என்று எண்ணும்போது நம் நாட்டில் ஒரு ஒளி கீற்றுத் தெரிகிறது. வெறும் கற்பனை அரசாக இல்லாமல் உண்மை ராமராஜ்யம் மலரட்டும் என்று நம்புவோம். ராமரே நமக்கு வழி காட்டுவார்.

முற்றும்

**பின்னுரை**

கடந்த 25 இதழ்களில் வால்மீகிப்ரதீபம் வெளியானதை வாசகர்கள் படித்திருப்பர். எத்தனை பேர் தெரியவில்லை. இதற்கு பாராட்டுத் தெரிவித்தவர் அடையபலம் ப்ரம்மஸ்ரீ ராமக்ருஷ்ண தீக்ஷிதர் அவர்கள். இதை எழுதியதின் காரணம் பெரிவாளின் பக்தர் ஸ்ரீபார்த்தசாரதி அவர்கள். அவருடைய ஒரு புத்தகம் என்னை எழுதத்தூண்டியது. பெரியதாக எழுதி எனக்குப் பழக்கமில்லை. பெரிய பாண்டித்யமும் எனக்கில்லை. உரைகள் எதையும் வாசிக்கவில்லை. காமாக்ஷியின் அருள் மகாபெரியவா அருள். வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. வால்மீகி ராமாயணம் எப்படி இக்காலாத்திற்கும் பொருந்தும் என்பதுதான். சின்ன சின்ன விஷயங்களிலிருந்து பெரிய ராஜ நீதி வரை அனாயசமாக சொன்னவர் வால்மீகி. எளிய பதங்கள் எளிய நடை, பலமான உபதேசங்கள். எனவே தான் வால்மீகி ப்ரதீபம் என்று பெயரிட்டேன். (தீபத்தை காண்பிக்கிறார்) அவர் வழி நடப்பது நம் கடமை. இதில் சொல்லாத விஷயங்கள் பல. கட்டுரையின் நோக்கமே அதைப் பற்றி படிக்கத் தூண்டவேண்டும். இது அதைச் செய்திருக்குமென்று நம்புகிறேன். பலஸ்ருதியில் ராமாயணத்தை எழுதினவர்கள் படித்தவர்கள் மேன்மை அடைவர் என்று சொல்லப்பட்டிருக்கும். அந்த மேன்மையை எல்லாரும் அடைய ராமரைப் ப்ரார்த்திக்கிறேன். வாசகர்கள் மூல ராமாயணத்தை ஸம்ஸ்க்ருத்தில் படித்து ரஸிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

சுபம் பூயாத் சுபம் பூயாத். சுபம் பூயாத்.

# புராணக் கதை

## நந்தா சரஸ்வதி கதை

**வாதூலன்**

முன்கதைச் சுருக்கம் சாபம் பெற்று புலியாக மாறிய அரசன் ஒரு பசுவைக்கொல்ல எத்தனிக்கிறான். அது தன் கன்றுக்குப் பால் தந்தபின் வருவதாக ஸத்யம் செய்து கன்றுக்குப் பால் தந்தபின் தன் நண்பர்களிடம் விடைபெறுகிறது. )

நந்தா பசுவின் சொல்லைக் கேட்ட அதன் நண்பர்கள் சிரித்து ''ஏன் இந்த மடத்தனம்? தன்னைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முக்யம். தனக்கு ஆபத்காலம் இருந்தால் தன்னைக் காப்பாற்றி கொள்ள பொய்யுரைக்கலாம். ஒருவரைக் காப்பாற்ற பொய் உரைத்தால் அது உண்மையே ஆகும் என்றன.

மற்றவரைக் காப்பாற்ற பொய்யுரைப்பேன். என்னைக் காப்பாற்றிக் கொள்ள பொய் சொல்ல மாட்டேன். இவ்வுலகம் ஸத்யதிலேயே நிலை பெற்றுள்ளது. சொன்னசொல் தவறாமை முக்யம். பலிசக்ரவர்தி சொல் தவறாது பாதாளலோகத்துக்குச் சென்றார். அகஸ்த்யரிடம் வாக்கு கொடுத்த விந்த்ய மலை மேலே வளரவில்லை. ஆயிரம் அஸ்வமேதங்களை விட ஸத்யம் மேன்மை உடையது.

ஸத்யம் என்பது தவம். ஆசாரங்களோ வ்ரதங்களோ தேவையில்லை. பதிதன் கூட ஸத்யமாயிருப்பின் சொர்கம் போவான், என்று கூறியதும் அதனுடைய சகாக்கள் நீ மேன்மையுடையவள், தேவர்களும் உன்னை வணங்குவர் என்று வாழ்த்தின. நந்தாவும் வனதேவதைகளை தன் குழவியைக் காக்க வேண்டிக் கொண்டு புலி இருக்குமிடத்திற்கு வந்தது காத்துக் கொண்டிருந்த புலியிடம் நெருங்கும்போது அதன் கன்றும் ஓடி வந்தது நான் வந்து விட்டேன் என்னைத் தின்னபின் என் கன்றையும் நீ சாப்பிடலாம் என்றது. தன்னைக் கொன்றுவிடும் என்று எதிர்பார்த்த பசுவிடம் '' நீ சத்யம் தவறாதவள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றினாய்.

உனக்கு எந்த துன்பமும் நேராது. உன்னிடமிருந்து நான் பாடம் கற்றேன். இன்றிலிருந்து நான் எப்ராணியையும் கொல்லமாட்டேன். என்னுடைய பாவங்களை எப்படிப் போக்கி கொள்ள வேண்டும் என்று கூறுவாயாக. '' என்றது கலியுகத்தில் தானம் சிறந்ததது என்பர். அதிலும் அபயதானம் பெரிது, அகிம்ஸைக்கு இணை எதுவும் இல்லை. இதுவே என் உபதேசம்''என்று நந்தா கூறியது.

மான் ஒன்றின் சாபத்தால் புலியாக மாறினேன். உன்னுடன் பேச பேச முன் நினைவுகள் வருகின்றன. உன்னுடைய பெயர் என்ன என்று புலி கேட்க என் பெயொர் நந்தா, சீக்ரம் என்னை இரையாக்கிகொள் என்றது பசு. அதன் பெயரைக் கேட்ட மாத்ரத்திலேயே புலி மனுஷ்ய ரூபத்தை எடுத்தது. தர்ம தேவதையும் அப்போது அங்கு வந்து உன் ஸத்யவ்ரததைப் பாராட்டுகிறேன். ஏதேனும் வரம் கேள் என்றது. ''இந்தஆறு நந்தாசரஸ்வதி என்று வழங்கப்படட்டும். இதில் குளிப்பவர்கள் பாவம் போகட்டும் என்றது'' தர்ம தேவதையும் உடன்பட பசுவும் தன் கன்றுடன் காட்டில் போயின. ப்ரபஞ்சனன் எனும் அவ்வரசனும் தன் நாடு சென்றான். இது தான் இந்த ஆற்றின் கதை. என்று பொலஸ்த்யர் அரசன் தேவவ்ரதனுக்குக் கூறினார்.

(பாத்ம புராணம்)


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

**ஸ்வர்ண ரத சேவா**



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

- ♦ அனுஷம் ♦ மூலம்
- ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**


ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# வேதாந்த ஸாரம்

## ஸாதானந்த யோகி

வேங்கடகணபதி சர்மா



முன் இதழில் சம தம உபரதி திதிக்ஷா ஸமாதான ஸ்ரத்தா சொல்லப்பட்டன. அவைகளை இவ்விதழில் விரிவாகப் பார்ப்போம்.

**சமஸ்தாவத் ஸ்ரவணாதி வ்யதிரிக்த விஷயேப்யோ மனஸோ நிக்ரஹ:**

ஸ்ரவணம் முதலான இந்த்ரியங்களிலிருந்து மனதை அடக்கல். சமம் எனப்படும்.

**தம; பாஹ்யேந்த்ரியாணாம் தத் வ்யதிரிகதவிஷயேப்யோ நிவர்தனம்.20**

புலன், பொறிகளை அடக்குதல் தமம் எனப்படும்.

**நிவர்திதானாமேதேஷாம் தத்வ்யதிரிக்த விஷயேப்ய;**
**உபரமணம் உபரதிரதவா விஹிதானாம் கர்மணாம் விதினா பரித்யாக: 21**

அதனதன் விஷயங்களிலிருந்து அடக்கப்பட்ட புலன் பொறிகளின் தாக்கம் நின்று போதல். அல்லது சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை விடுதல். உபரதி எனப்படும்.

**திதிக்ஷா சீதோஷ்ணாதி த்வந்த்வ ஸஹிஷ்ணுதா 22**

வெப்பத்தையும் குளிரையும் தாங்குதல் திதிக்ஷா எனப்படும்.

**ஸமாதானம் நிக்ருஹீதஸ்ய மனஸ: ஸ்ரவணாதௌ**
**தனுகுணவிஷயே ச ஸமாதி: 23**

அடக்கப்பட்ட மனதை ஸ்ரவணம் போன்ற விஷயங்களில் அதற்கு பொருந்தும் விஷயங்களில் ஏகதாரையாக வைத்திருத்தல் ஸமாதி எனப்படும்.

ஸ்ரத்தா குருபதிஷ்ட வேதாந்தவாக்யேஷு விஸ்வாஸ:

குருவின் உபதேசப்படி வேதாந்த வாக்யங்களில் நம்பிக்கை வைத்தல் ஸ்ரத்தா எனப்படும்.

முமுக்ஷுத்வம் மோக்ஷேச்சா 25

முக்தி அடைய ஆவல் முமுக்ஷுத்வம் எனப்படும்.

ஏவம்பூத: ப்ரமதாதிகாரீ ஸாந்தோ தாந்த:''(ப்ரு உப 4/4/23 இத்யாதி ஸ்ருதே: உக்தம் ச ப்ரசாந்தசித்தாய ஜிதேந்த்ரியாய ப்ரஹீணதோஷாய யதோக்தகாரிணே

குணான்விதாய அனுகதாய சர்வதா ப்ரதேயம் ஏதத் முமுக்ஷவே

இதி உபதேச ஸாஹஸ்ரீ 324/16/72 26

இப்படி சொல்லப்பட்டுள்ள மாணவன் அதிகாரியாகிறான்.சாந்த; தாந்த: என்று ப்ருஹதாரண்யத்தில் கூறப்பட்டுள்ளது, மேலும் சாந்தனாயுள்ளவனும், இந்த்ரிய நிக்ரஹமுள்ளவனும், கீழ்படிதல் உள்ளவனும் தோஷமற்றவனும், குணங்களுடைய வனும், வினய மானவனும், மோக்ஷத்தை விரும்பவுனுமானவனுக்கு இதைச் சொல்ல வேண்டும். (உபதேச ஸாஹஸ்?ரீ)

விஷயம் ஜீவப்ரம்ம ஐக்யம் சுத்தசைதன்யம் ப்ரமேயம்

தத்ர ஏவ வேதாந்தானாம் தாத்பர்யாத்ந 27

விஷயம் என்ன? ஜீவனும் ப்ரம்மமும் ஒன்று, அதுவே சுத்தசைதன்யத்தின் இயற்கை. இதுவே வேதாந்த விஷயம்.

ஸம்பந்தஸ்து ததைக்யப்ரமேயஸ்ய தத்ப்ரதிபாதகோப

நிஷத் ப்ரமாணஸ்ய ச போத்யபோதகபாவ: 28

அறியப்படவேண்டியதைச் சொல்லும் உபனிஷத்வாக்யங்களின் தாத்பர்யத்தை உணா்தல் ஸம்பந்தம் எனப்படும்.

ப்ரயோஜனம் து ததைக்யப்ரமேயகத அஞ்யான நிவ்ருத்தி:

ஸ்வஸ்வரூப ஆனந்த அவாப்திச்ச ''தரதி சோகம் ஆத்மவித்'' இத்யாதி ஸ்ருதே: ''ப்ரம்மவித் ப்ரம்மைவ பவதி'' இத்யாதி ஸ்ருதேச்ச

ஜீவப்ரம்ம ஐக்யத்தைத் தெரிந்து கொள்வதால் அஞ்யானம் போதல், தன் ஸ்வரூபத்தின் ஆனந்தத்தை அடைதல் ப்ரயோஜனம் எனப்படும். ஆத்மாவை அறிந்தவன் சோகத்தைக் கடக்கிறான்'' ப்ரம்மத்தை அறிந்தவன் ப்ரம்மமாக ஆகிறான்'' என்று ஸ்ருதிகள் கூறும்.

## குருவின் அவஸ்யம்

அயமதிகாரீ ஜனன்மரணாதி ஸம்ஸார அனல ஸந்தப்தோ தீப்தசிரா ஜலராசிமிவோபஹாரபாணி: ஸ்ரொத்ரியம் ப்ரம்ம நிஷ்டம் குருமுபஸ்ருத்ய தமனுஸரதி ''தத்விஞ்யானார்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ஸ்ரோத்ரியம் ப்ரம்ம நிஷ்டம்'' இத்யாதி ஸ்ருதே:

இப்படிப்பட்ட அதிகாரீ பிறப்பு இறப்பு முதலானவைகளால் தகிக்கப்பட்டவனாய் பற்றி எரியும் தலையுடையவனாய் அதை அணைக்க ஜலத்தை நாடுவதுபோல் குருவை ஸமித்தை கையில் உடையவனாய் அணுகி அனுசரிக்கவேண்டும். இதை முண்டகம் முதலிய ஸ்ருதிகளும் கூறுகின்றன.

ஸ குரு: பரமக்ருபயா அத்யாரோப அபவாதன்யாயேனம்
உப்திசதி''தஸ்மை ஸ வித்வானுபஸன்னாய ஸம்யக்
ப்ரசாந்த சித்தாய சமான்விதாய யேன அக்ஷரம் புருஷம் வேத
ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரம்மவித்யாம்''ஈத்யாதி
ஸ்ருதே; (முண்டகம் 1/2/13)

அந்த குருவும் க்ருபையுடன் அத்யாசத்தையும் அதை நீக்குவதையும் உபதேசிக்கவேண்டும். சாந்தனும் தாந்தனுமான சிஷ்யனுக்கு அழிவில்லாத ப்ரம்ம வித்யையை உபதேசிக்க வேண்டும்'' ஸ்ருதிகளும் இதைக்கூறுகின்றன.

(தொடரும்)

# சித்திரை மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 14-04-2019 | ஞாயிறு | மேஷவிஷுவ புண்ய காலம் |
| 15-04-2019 | திங்கள் | ஏகாதசி |
| 16-04-2019 | செவ்வாய் | துவாதசி |
| 17-04-2019 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 18-04-2019 | வியாழன் | பௌர்ணமி பூஜை |
| 21-04-2019 | ஞாயிறு | அனுஷம் தேர் |
| 22-04-2019 | திங்கள் | அனுஷம் பாராயணம் |
| 24-04-2019 | புதன் | மூலம் தேர் |
| 26-04-2019 | வெள்ளி | உத்ராடம் பாராயணம் |
| 26-04-2019 | வெள்ளி | உத்ராடம் தேர் |
| 28-04-2019 | ஞாயிறு | அவிட்டம் தேர் |
| 28-04-2019 | ஞாயிறு | அவிட்டம் பாராயணம் |
| 30-04-2019 | செவ்வாய் | ஏகாதசி |
| 01-05-2019 | புதன் | துவாதசி |
| 02-05-2019 | வியாழன் | ப்ரதோஷ பூஜை |
| 04-05-2019 | சனி | அமாவாசை |
| 07-05-2019 | செவ்வாய் | அக்ஷயத்ரிதியை |
| 10-05-2019 | வெள்ளி | சங்கர ஜயந்தி |
| 19/04/19, 26/04/19, 03/05/19 - 10/05/19 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஸபா ரஞ்ஜன சதகம்

*நீலகண்ட தீக்ஷிதர்*

## அர்த்தம்

இப்பகுதியில் ஆசிரியர் பொருள் அதாவது அர்த்தம் பற்றி சிலேடையாகக் கூறுகிறார். புரிந்துகொள்ளவும்.

**அர்த்தவந்த: ப்ரசஸ்யந்தே நிந்த்யந்தே தத்வினாக்ருத:**
**ஆகமேஷ்வபி சேதேவமத்புதம் கிம் சரீரிஷு॥ 86**

*பொருள் உள்ளவனையே புகழும் உலகம். அது இல்லையானால் இகழும். சாஸ்த்ரங்களும் இப்படித்தான். பொருளிருந்தால்தான் அவை சிறக்கும்.*

**அர்தோபி அர்தேன ஸாத்ய: கா வார்தா தர்ம காமயோ:**
**அர்த: ஸர்வஜகன்மூலம் அனர்தோ அர்தவிபர்யய: ॥ 87**

*பொருளினாலேயே பொருள் ஸாத்யமானால் தர்மத்திற்கும் காமத்திற்கும் என்ன வேலை? பொருளே இவ்வுலகிற்குக்காரணம் அர்தமில்லாவிடின் அனர்தமாகி விடும்.*

**கர்ம ஞானம் மோக்ஷாய கர்மண்யர்தோஅதிகார:**
**அதோஅர்தேன கைவல்யம் ந கைவல்யேன லப்யதே ॥ 88**

*கர்மத்தினாலும் ஞானத்தாலும் மோக்ஷம் பெறலாம். கர்மம் செய்ய அர்த்தம் தேவை. அதனால் பொருளே மோக்ஷஸாதனம்.*

**கதமர்தம் நிஷேதந்து ஸ்ருத்ய: ஸ்முதயோபி வா**
**யாஸாமேகம் பதமபி ந சலந்தி அர்ததோ வினா ॥ 89**

*எப்படி ஸ்ருதி ஸ்ம்ருதி இரண்டும் பொருளை தடைசெய்யும்? அர்த்தம் இல்லாமல் இரண்டும் எப்படி பொருள் கொடுக்கும்?*

லக்ஷ்மீச இதி கோவிந்தோ மேருதன்வேதி சங்கர:
ஹிரண்யகர்பம் இத்யேவ ப்ரஹ்மாபி பஹுமன்யதே ॥ 90

*கோவிந்தனை லக்ஷ்மீசன் என்றும் சங்கரனை மேருதன்வா என்றும் ப்ரம்மாவை இரண்ய கர்பன் என்றும் அவர்களது செல்வத்தை வைத்தல்லாவா அழைக்கபடுகிறார்கள்.*

**ஊர்த்வம் கச்சந்தி யம் த்யக்த்வா யம் க்ருஹீத்வா பதத்யத:**
**தஸ்ய கௌரவம் அர்தஸ்ய தாவதைவானுமீய்தாம் ॥ 91**

*பொருளில்லாதவன் உலகில் மிதக்கிறான். அதாவது செல்லாக் காசாகிறான். பொருள் உள்ளவன் கனமாக ஆழ்கிறான். அதாவது மதிக்கப்படுகிறான். கனவானாகிறான். அர்தத்தின் கனம் இதிலிருந்தே புலப்படும்.*

( தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்’’

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**ஆகர்ணாக்ருஷ்ட காஸ்த்ர ஸஞ்சாதம் தாபமம்ப மே**
**ஆசாமது கடாக்ஷஸ்தே பர்ஜன்யோ வ்ருஷ்டிமானிவ ॥ 17**

*தாயே காதுவரை இழுத்து எய்திய காமபாணத்தால் என் தாபத்தை மழை பொழியும் மேகம்போல் உன் கடாக்ஷம் அகற்றட்டும்.*

**குர்மே கர்வேண அபசாரானபாரான் யத்யத்யம்ப**
**த்வத்பதாப்ஜம்ததாபி:**
**மன்யே தன்யே தேவி வித்யாவலம்பம் மாதேவ புத்ரம் பிப்ருதாஸ்வேனம் 72**

*தாயே கர்வத்தால் பல அபசாரங்களைச் செய்வேன். எனினும் உன் பாதம் அறிவுக்கு ஆஸ்ரயம் என்று மதிக்கிறேன். தன்யே தாய் புத்ரனைத்தாங்குவது போல் என்னைப் பாதுகாக்கவும்.*

**யதோபாஸ்திக்ஷதிர் நஸ்யாத்தவ சகஸ்ய ஸுந்தரீ**
**க்ருபயா குரு கல்யாணீ ததா மே ஸ்வஸ்திராயுஷீ ॥ 73**

*ஸுந்தரீ கல்யாணீ உனது ஸ்ரீ சக்ரபூஜைக்கு பங்கமில்லாலாதபடி கருணையால் க்ஷேமத்தையும் ஆயுளையும் செய்.*

**சக்ரம் ஸேவே தாரகம் ஸரவ ஸித்யை ஸ்ரீமன் மாத:ஸித்தயச் சாணிமாத்யா: ந**
**நித்யமுத்ரா சக்தயச்சாங்க தேவ்யோ:யஸ்மின் தேவா அதி**
**விஸ்வே நிஷேது: ॥ 74**

*ஸ்ரீமாதாவே சகலஸித்திகளும் சித்திக்க ஸ்ரீசக்ரத்தை ஸேவிக்கிறேன். அணிமாதி சித்திகளும் நித்யமுத்ராசக்திகளும் அங்க தேவதைகளும் தேவர்களும் ஸகல உலகும் அதிலேயே இருக்கின்றனர்.*

**ஸுகுமாரே ஸுகாகாரே ஸுனேத்ரே ஸூக்ஷமமத்யமே**
**ஸுப்ரஸன்னா பவ சிவே ஸும்ருடீகா ஸரஸ்வதீ ॥ 75**

*மென்மையானவளே இன்பவடிவே அழகிய கண்ணுடையவளே மெல்லிடையாளே சிவயே ஸுகத்தைதரும் ஸரஸ்வதீ வடிவமான நீ நல்லருள் புரிவாயாக.*

# பித்ரார்ஜிதம்

அல்பஸ்ருதன்

குரு சிஷ்ய பரம்பரை இந்த ப்ரம்ம வித்யையை ஆதியில் கடவுள் விவஸ்வானுக்கு உபதேசித்தார். அவர் மனுவுக்கும். மனு இக்ஷ்வாகுவுக்கும் உபதேசிக்க அப்படியே ராஜரிஷிபரம்பரையில் வந்த இந்த வித்தை சிறிது காலம் மறைந்து இருக்க ஸ்ரீக்ருஷ்ணர் அர்ஜுனனுக்கு இதை உபதேசித்தார். அனுக்ரஹ வரம் பெற்ற ஸஞ்சயன் கண்டு கேட்டதை எல்லாம் த்ருதராஷ்ட்ரனுக்கு சொல்லிஅன்று முதல் எல்லாருக்கும் பயன்படும்படியாகச் செய்துவிட்டான்.

## மோகம் அகலும் விவேகம் வரும்

இதை முழுவதும் கேட்டபின் அர்ஜுனன் கூறுகிறான். ''அச்சுதா மோகம் நீங்கினேன் நினைவு கூர்ந்தேன், நிலைபெற்றேன், ஐயம் அகன்றது நின் ஆணையைச் செய்வேன்'' இப்படியேதான் ப்ரம்ம வித்தையைப் படித்தும் கேட்டும் கற்றும் பழகுபவர்கள் மோகமற்ற நிலை வந்து ஆண்மையுடன் அறம் செய்வார்கள்.

## வாழ்க்கைத் திறவுகோல்

இந்த ப்ரம்மவித்தை கண்ணுக்கெட்டாத பொருளைசொல்லுவதால் இங்கே என்ன பயன் என்று கேட்கலாம். பல்லுலகும் பல்லுயிரும் படைத்து துடைக்கின்ற எல்லயற்ற பரம்பொருளையும் உலகையும் உயிரையும் அவற்றின் தொடர்பையுமே அடிப்படியாகக் கொண்டது. இந்த உரையாடலில் ஆங்காங்கு பல்வேறு பொருள்பற்றி பேச்சு எழுகின்றது உணவு உடை உடற்பயிற்சி முதலிய தினசரித் தேவைகளைக் கூட இன்னூல் வழி செய்கிறது. இது வெறும் வரட்டு வேதாந்த நூலல்ல. வாழ்க்கையின் ஸாரத்தைஉறிஞ்சி அதை அனுபவிக்க இதைவிட திறவு கோல் எதுவுமில்லை. என்னாளும் துன்பமில்லாமல் வாழ்வது எப்படி என்பதற்கு இதுஒரு பொக்கிஷம்.

## பெரியோர் கருத்துகள்

ஸ்ரீசங்கரர் சொல்கிறார் வேதவாக்யங்களின் ஸாரமெல்லம் இறுதித் திரண்டது இவ்வித்தை. இதைப்படித்தவன் ப்ருஷார்த்தத்தைப் பெறுகிறான். அதனால்தான் இதற்கு உரை எழுதப்புகுந்தேன். மகாத்மா காந்தி சொல்கிறார். என் மனத்தில் பெரும் சந்தேஹம் வரும்போதெல்லாம் கீதையைப் படிப்பேன். அதி வரும் வசனங்கள் பெரும் ஆறுதலைத்தரும். எவ்வளோ கஷ்டங்களின் நடுவிலேயும் என் மனம் உடையாமலிருப்பதற்குக் காரணம் இந்த சாஸ்த்ரமே. பல்லாயிரத்தாண்டு இந்த

ப்ரம்மவித்தை பல் ஆயிரம் வருஷங்களாக நம் நாட்டில் வழங்கிவருகிறது. மதாசார்யர்கள் இதைப்படித்து இதன் வசனத்திற்கிசைந்தே என்சித்தாந்தமும் உள்ளது என்று சொல்வர்.

வடமொழி உரை ஆசிரியர்கள் இன்னூலுக்கு முதல் பாஷ்யம் எழுதியவர் ஸ்ரீசங்கரர். கீதாபாஷ்யம் என்று அதன் பெயர். அவரைப் பின்பற்றி அவருடைய சிஷ்யர்கள் உரை எழுதியுள்ளனர். பத்தாம் நூற்றாண்டில் யாமுனமுனி கீதார்த்தஸங்க்ரஹம் எனும் நூலை அருளினார். ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த ஸ்தாபகரான ஸ்ரீராமானுஜர் கீதாபாஷ்யம் எழுதினார். இவருடைய உரையையும் சங்கரரின் உரையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பலபொருள்கள் விளங்கும். ஆனந்ததீர்த்தர் எனும் மத்வாசார்யர் கீதாபாஷ்யம், கீதா தாத்பர்யம் என்று இரண்டு நூல்களை எழுதினார். அவர் ஸமகாலத்தவரான ஸ்ரீவேதாந்த தேசிகர் தாத்பர்ய சந்த்ரிகை எனும் நூலை எழுதினார்.

தொடரும்

# எம்பெருமான் கண்ணன் சொன்னான் உத்தவா என் பக்தனுக்கே

1. என்னுடைய திவ்ய சரித்திரங்களை கேட்பதில் ஆர்வம்

2. என்னுடைய நாமாவைப் போற்றுதல்

3. என்னுடைய பூஜைகளில் முழு ஈடுபாடு

4. என் திவ்ய தேசங்களுக்கு யாத்திரை செய்தல்

5. என் பொருட்டே கரணகளேபரங்கள் என உணர்தல்



9. வாயினால் என் உயர் குணங்களைப் பாடுதல்

10. தன் மனதை என்னிடத்திலேயே ஒப்படைத்தல்

11. உலகின் இன்பங்களைத் தவிர்த்தல்

12. என் பொருட்டு செல்வத்தைத் தியாகம் செய்தல்

13. எனக்குப் பிரியமானவைகளைச் செய்தல்

14. தானம், தவம், ஜபம், வேள்வி, விரதம் இவைகளை என் ப்ரீதிக்காகவே செய்தல்.

15. எல்லாவற்றிற்கும் மேலாக தன் ஆத்மாவையே என்னுடையது என்று அர்ப்பணித்தல்.

இவைகள் நன்கு அமைந்துவிடுமானால் அவர்களால் இனியடைய வேண்டிய பொருள் என்ன இருக்கிறது? (ஒன்றுமில்லை)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

ந த்வமர்ஹஸி பார்தேன ஸுதபுத்ர ரணே வதம்
குலஸ்ய ஸத்ருசஸ்தூர்ணம் ப்ரதோதோ குஹ்யதாம் த்வயா 151
அங்கராஜ்யம் ச நார்ஹஸி த்வம் உபபோக்தும் நராதம ।।

*ஏ கர்ணா பார்த்தனால் வதம் செய்யப்பட உனக்கு அருகதை இல்லை.சாட்டையை எடுத்துக் கொண்டு உன் குலத்தொழிலைச் செய்.அங்கராஜயத்தை அனுபவிக்கவும் உனக்கு அருகதையில்லை.*

ததோ துர்யோதன;கோபாத் உத்பபாத மஹாபல:
ஸோப்ரவீத் பீமகர்மணாம் பாம்ஸேனமவஸ்திதம் ।। 152

*கோபம் கொண்ட துர்யோதனன் துள்ளியெழுந்து பீமனைப்பார்த்து கூறினான்.*

வ்ருகோதர ந யுக்தம் தவ வசனம் வக்துமீத்ருசம்
சூராணாம் ச நதீனாம் ச ப்ரபவோ துர்விபாவன:153
பவதாம் ச ததா ஜன்ம தப்யாகமிதம் மயாநச

*ஏ பீம நீ இப்படி பேசுவது சரியில்லை. வீரர்களின் மூலத்தையும் நதிகளின் மூலத்தையும் ஆராய்வது சரியில்லை.உன் பிறப்பைப் பற்றி நானறிவேன்.*

ஸகுண்டலம் ஸகவசம் ஸர்வலக்ஷணலக்ஷிதம்
கதமாதித்ய ஸத்ருசம் ம்ருகோ வ்யாக்ரம் ஜனயிஷ்யதி ।। 154

*கவசகுண்டலங்களுடன் பிறந்தவன் கர்ணன், ஸூர்யனைப் போல் ஒளி பொருந்தியவன். மான் புலியை ஈனுமா?*

ப்ருத்வீராஜயர்ஹோ அயம் ந அங்கராஜ்யம் நரேஸ்வர
யஸ்ய வா மனுஜஸ்யேதம் ந க்ஷாந்தம் மத்விசேஷ்டிதம்
ரதமாருஹ்ய பத்ப்யாம் ஸ வினாமயது கார்முகம் ।। 155

*அரசர்களே அங்க ராஜ்யமட்டுமில்லை இவ்வுலகையே ஆளப் பிறந்தவன் இவன். நான் செய்வதைப் பிடிக்காதவர்கள் முட்டிப் போட்டு ரதமேறட்டும்.*

தத்ஸர்வஸ்ய ரங்கஸ்ய ஹாஹாகாரோ மஹானபூத்
ஸாதுவாதானுஸம்பத்த: ஸூர்யசாஸ்தம் உபாகமத் ।। 156

*அந்த அரங்கம் முழுவதும் அப்போது ஹாஹாகாரம் கேட்டது. தொடர்ந்து மலை வாயிலில் கதிரவனும் மறைந்தான்.*

ததோ துர்யோதன; கரமாலம்ப்ய அக்ரகரே ந்ருப:
தீபிகாபி க்ருதாலோகஸ்தஸ்மாத் ரங்காத் வினிர்யயௌ ।। 157

*தீபங்களால் ப்ராகாசித்த அந்த அரங்கத்தை விட்டு துர்யோதனன் கர்ணனின் கையைப் பிடித்துக்கொண்டு வெளியேறினான்.*

பாண்டவாச்சா ஸஹத்ரோணாஸ்ஸக்ருபாச்ச (விசாம்பதே)
பீஷ்மேண ஸஹிதாஸ்ஸர்வே யயௌஸ்வம் ஸ்வம் நிவேசனம் ।। 158

*பீஷ்மர், த்ரோணர், க்ருபர் இவர்களுடன் பாண்டவர்களும் தம்தம் வீட்டிற்குச் சென்றனர்.*

அர்ஜுனேதி ஜன: க்ஸ்சித் கஸ்சித் கர்ணேதி (பாரத)
கஸ்சித் ஹுர்யோதனேதி ப்ருவந்த: ப்ரஸ்திதாஸ்ததா ।। 159

*அர்ஜுனன் என்று சிலரும் கர்ணன் என்று சிலரும் துர்யோதனன் என்று சிலரும் கூவிக் கொண்டு வெளியேறினார்கள்.*

துர்யோதனஸ்யாபி ததா கர்ணமாஸ்தாய (பார்திவ )
பயமர்ஜுனஸம்ப்ராப்தம் க்ஷிப்ரமந்தரதீயத ।। 160

*கர்ணனை நண்பனாக்கியபின் அர்ஜுனனைப்பற்றிய பயம் துர்யோதனனுக்கு நீங்கியது.*

த்ருதராஷ்ட்ரஸ்து (ராஜேந்த்ர) யதா கௌரவனந்தனம்
யுதிஷ்டிரம் விஜானன் வை ஸமர்தம் ராஜ்ய ரக்ஷணே
யௌவராஜ்ய அபிஷேகார்தம் ஆமந்த்ரயத மந்த்ரிபி:
தே து புத்வா அனவ்தப்யந்த த்ருத்ராஷ்ட்ராத்மஜாஸ் ததா ।। 161

*திருதராஷ்ட்ரனும் யுதிஷ்டிரன் ஆளும் திறமை உள்ளவன் என்பதை அறிந்து மந்த்ரிகளுடன் யுவராஜ அபிஷேகத்திற்காக ஆலோசனை செய்தான்.இதை அறிந்த அவனுடைய மகன்கள் பொறாமையால் புழுங்கித் தவித்தனர்.*

# யமபயம் இல்லாதவர் யார்?

மைத்ரேயர் - ஏழு உலகங்கள், பூமியில் ஏழு த்வீபங்கள் அதல விதயாதி கீழ் உலகங்கள், இவைகளில் ஒரு அங்குலம்கூட கர்ம பரவசமான ஜந்துக்கள் இல்லாத இடமே இல்லை. இந்த ஜந்துக்கள் அனைத்தும் யம தர்மராஜனுக்கு உள்பட்டவை. அவை யமதண்டனையை அனுபவித்துப் பிறகு தேவர்களாகவோ மனிதர்களாகவோ பிறக்கின்றனர் அல்லவா? ஆகவே யமதண்டனைக்கு உட்படாதவர் யார் என்று ஸ்ரீ பராசரரை வினவ அவர் பீஷ்மர் நகுலனுக்கு உபதேசித்த வரலாற்றைக் கூறுகிறார்:- யமதர்மராஜன் ஜீவர்களை யமதண்டனைக்கு அழைத்துச் செல்லக் கையில் பாசத்துடன் புறப்படும் தன் ஸேவகர்களை அழைத்துக் காதில் வறுகிறார் ''ஸ்ரீ மதுஸூதனனை சரணமடைந்தவர்களை விட்டுவிடு, நான் விஷ்ணுபக்தர் அல்லாதவருக்கே பிரபு. லோக பூஜ்யரான பிரம்மா உலகின் ஹிதாஹிகளுக்குகாக என்னை யமன் என்ற பெயருடன் நியமித்திருக்கிறார். நான் விஷ்ணுவுக்கும் குருவுக்கும் அடங்கியவன் ஸ்வதந்திரனல்ல. என்னையும் அடக்க ஸ்ரீ விஷ்ணுவுக்கு அதிகாரமுண்டு. ஒரே ஸுவர்ணம் வளையல் என்றும் கிரீடம் என்றும் குண்டலம் என்றும் பலபெயரால் வழங்குவதுபோல் ஒரே விஷ்ணு தேவர் என்றம் மனிதர் என்று பசுக்ககள் என்றும் பல பெயரால் வழங்குகிறார். எப்படிக் காற்றினால் எழுப்பப்படும் தூளிகள் காற்று அடங்கியபின் பூமியில் பதிந்து விடுகின்றதோ அப்படியே ஸத்வ, ரஜஸ் தமோ குணங்களால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த ஜந்துக்கள் கடைசியில் பரமாத்மனில் அடங்கி விடுகின்றன. தேவ



பூஜ்யரான விஷ்ணுவின் சரணங்களை எவன் பரமார்த்த புத்தியுடன் ஸேவிக்கின்றானோ பாபங்களற்ற அவனை, ஆஜ்யத்தால் கொழுந்துவிட்டு எரியும் அக்னியைப் போல் தூரத்தில் விட்டுவிடுகள்'' என்றார்.

இதைக் கேட்டு யமதூதர் விஷ்ணுபக்கதன் யார் என்று யமனைக் கேட்க யமன் கூறுகிறார்.

''எவன் ஸ்வதர்மத்திலிருந்து நழுவுவதில்லையோ, சத்ருமித்ரர்களில் ஸமபுத்தியுடன் எவன் இருக்கிறானோ திருட்டு ஜீவஹிம்ஸையற்றவனோ அவன் விஷ்ணுபக்தன். எவனுடைய நிர்மலமான மனதில் கலியின் தோஷங்கள் பரவவில்லையோ, அவனம் ரஹஸ்யத்தல் பார்த்தாலும் பிறர் தனத்தை எடுக்காதவன் அதாவது செப்பு முதல் தங்கம் வரை எல்லாவற்றையும் துரும்புபோல் நினைப்பவனம். எப்போதும் பகவானை தியானிப்பவனும் விஷ்ணுபக்தன். ஸ்படிகம்போல் நிர்மலனான விஷ்ணு மனதிலிருந்தால் மாத்ஸர்யத்துக்கு இடமேது? சீதகிரணனான சந்திரனில் அக்நி தாபத்திற்கு இடமேது? எவன் சுத்த புத்தியோ, சுத்த ஆசரணைகளுள்ளவனோ ஸகல பிராணிகளக்கும் சினேகிதனோ, பிரியமாயும் ஹிதமாயும் பேசுபவனோ, வஞ்சனை செய்யாதவனோ அவன் ஹிருதயத்தில் பகவான் வஸிப்பார். செடி அழகாகத் துளிர்விடுவதைப் பார்த்தால் அடியில் பூமிரஸம் நன்றாக இருப்பது விளங்கவில்லையா?

ஆகையால் யம நியமாதிகள் உள்ளவரையும் தினந்தோறும் பகவச் சிந்தனையாக இருப்பவரையும் மதம், மானம் மத்ஸரம் இவையற்றவரையும் விட்டுவிடு.

பரதனத்தை அபஹரிப்பது, ஜந்துக்களை ஹிம்ஸிப்பது, பொய் பேசுவது கடுமையாகப் பேசுவது துராசாரத்துடனிப்பது இத்தகைய செய்கையுள்ள மனிதர் ஹிருதயத்தில் பகவான் இருப்பதில்லை. பிறர் ஸம்பத்தை ஸஹிக்காமை, ஸஜ்ஜனங்களை நிந்தித்தல், கார்பண்யம், பகவானை ஆராதிக்காமலிருத்தல், இவை இருந்தால் பகவான் மனதில் வரமாட்டார். அசுபமான புத்தி, துஷ்ட விஷயத்தில் பிரவிருத்த துண்டர்களுடன் சேர்க்கை தினந்தோறும் பாப கர்மங்களை செய்தல் இவை பகவானிடம் பக்திக்கு விரோதமாவை.

ஸகல பிரபஞ்சமும் நானும் ஸாக்ஷாத் பகவான் வாஸுதேவன்' அவன் ஒருவனே பரமேச்வரன் பர பிரம்மம். அத்வதீயன் அத்வைதமே தத்வம் என்று மனதில் திடமாக சிந்திப்பவர்களை தூரத்தில் நமஸ்கரித்து விட்டுவிடு'' – என்றார்.

(விஷ்ணுபுராணம்)

# மகா பெரியவாவின் வைர மொழிகள்



- கடவுளிடம் இருந்தான் நாம் அனைவரும் பிரிந்து வந்திருக்கிறோம். மீண்டும் அவனிடம் ஒட்டிக் கொண்டு ஒன்றாகிவிட முயற்சிப்பதே பிறவிப்பயன்.
- லாப நஷ்ட வியாபாராமாக நினைக்காமல், நம்மால் முடிந்தவரை பிறர் துன்பத்தைப் போக்க நம்மால் ஆனதைச் செய்ய வேண்டும்.
- பிதுர் காரியம் செய்வதற்கு சிரத்தையும், தெய்வ காரியம் செய்வதற்கு பக்தியும் வேண்டும்.
- மனதில உள்ள அசுத்தம் அனைத்தும் நீங்கி விட்டால், தானாகவே கடவுளின் பக்கம் திரும்பிவிடும்.
- சுவரில் எறியும் பந்து மீண்டும் நம்மிடமே திரும்பிவிடும். அதுபோல கோபத்தில் பிறரைத் தாக்கினால் அது மீண்டும் வந்து நம்மைத் தாக்கும்.
- உங்களது ஆசைகள் நிறைவேறத் தடையாக இருப்பவர்கள் மீதும், உங்களுக்குக் கீழே பணியாற்றுபவர்கள் மீதும் ஒருபோதும் கோபத்தைக் காட்டாதீர்கள்.
- பிறரிடம் நம் அன்பை ஒப்புக்குக் காட்டாமல் செயலில் காட்டினால் இறைவனின் அருள் நமக்குக் கிடைக்கும்.
- தர்மம் செய்ய எண்ணம் வந்துவிட்டால், நினைத்தவுடன் செய்துவிட வேண்டும். இல்லா விட்டால் மனம் மாறிவிடும்.
- கோபம் எதிராளியை மாற்றுவதில்லை. மாறாக இருவருக்கும் இடையே வெறுப்பையும் துன்பத்தையும் உண்டாக்குகிறது.

- ஒருவரின் நிறைவேறாத ஆசையே கோபம் அல்லது வருத்தமாக வெளிப்படுகிறது. இதில் வருத்தத்தைவிட கோபத்தால் நமக்கும் பிறருக்கும் பெரிய அளவில் துன்பம் உண்டாகிறது.
- யாரையும் கோபிக்கும் தகுதியோ, உரிமையோ நமக்கு இல்லை. நாமும் பல சந்தர்பங்களில் தவறு செய்திருக்கிறோம். இது நம் மனசாட்சிக்குத் தெரியும்.
- பலவிதமான தீங்குகளில் தள்ளிவிடும் மோசமான எதிரி கோபம். அது நம்மை அண்டாதபடி விழிப்புடன் இருப்பத அவசியம்.
- நாம் எப்படியோ பூமியில் பிறந்து விட்டோம். நமக்குள் பாவங்களை ஏற்றிக்கொள்ள இடம் கொடுத்து விட்டோம். இனியாவது பாவத்தைப் போக்குவதற்காகப் பயன்படுத்திக் கொள்வோம்.
- வாக்கு, மனம், உடல் என மூன்றாலும் பாவம் செய்து இருக்கிறோம். அவற்றைக் கொண்டே அந்தப் பாவத்தைப் புண்ணியத்தில் கரைத்து விட முயற்சிக்க வேண்டும்.
- நாம் இடந்த உலகைவிட்டு ஒருநாள் போக வேண்டியது உறுதி. அதற்குள் பாவமூட்டையைத் தொலைத்துவிட்டால் போதும் ஆனந்தம் கிடைத்துவிடும்.
- வெளியுலகப் பொருட்களால்தான் நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்கிறது என்று நினைப்பது நம் அறியாமை. மகிழ்ச்சியோ, நிம்மதியோ அவரவர் மனதைப் பொறுத்த விஷயங்ளே.
- பாவத்தைப் போக்கும் ஒரே வழி நாம ஜெபம் மட்டும்தான். ''ஹர ஹர'' என்று சொல்லி வந்தால் துயர் தீர்ந்து விடும்.
- வாழ்க்கையில் ஒழுக்கம் ஏற்பட்டுவிட்டால் செயலில் அழகும், நேர்த்தியும் உண்டாகி விடும். அதன்பின் எந்தத் துறையிலும் சாதிக்க முடியும்.
- கடவுள் நமக்கு வாழ்வு அளித்திருக்கிறார். அதை நன்றியோடு எண்ணி, நல்லவர்களாக நமக்கும் பிறருக்கம் உதவி செய்ய வேண்டும்.
- எல்லா தானங்களிலும் அன்னதானமே மிகச் சிறப்பானது. இதில் மட்டுமே ஒருவரை முழுமையாக திருப்தி செய்யும் வாய்ப்புண்டு.